பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 296

ஞாயிற்றுக்கிழமை
21 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

போதைமாத்திரை;

## மூன்று பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் போதைமாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று 14

# தலைவனை இழந்து தவிக்கும் ஈழத் தமிழர்களுக்காக நிற்போம்

### தேர்தல் பரப்புரையில் விஜய் தெரிவிப்பு



சென்னை, செப்ரெம்பர் 21
தாய்ப்பாசம் காட்டிய தலைவனை இழந்து தவிக்கும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல்கொடுக்க வேண்டியது எமது கடமை என்று தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். 14



படம் ஐ.சிவசாந்தன்

நல்லூரில் திலீபனுக்கு

## ஆவணக்காட்சியகம் திறப்பு உருவச்சிலையும் வைப்பு!

யாழ்ப்பாணம், செப். 21
தியாகதீபம் திலீபனுக்கு நல்லூரில் நேற்று ஆவணக் காட்சியகம் திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன், அதில் திலீபனின் உருவச்சிலையும் வைக்கப்பட்டுள்ளது. 14

அடுத்தவருடம்

## அரச ஊழியர்களுக்கு வேதனம் அதிகரிக்கும்

### உறுதியளிக்கின்றார் அமைச்சர் பிமல்

கொழும்பு, செப். 21
அனைத்து அரச ஊழியர்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். 25 பேருந்து நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. 14

மண்டைதீவு கிரிக்கெட் மைதானத்தில்

## கட்டுமானப் பணிகளின்போது வெடிபொருள்கள் அடையாளம்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம் மண்டைதீவில், சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டுவரும் காணிக்குள் இருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. மைதான கட்டுமானத்துக்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் 14

## வயலில் மயங்கி வீழ்ந்து குடும்பத்தலைவர் இறப்பு!

### கைதடியில் துயரம்

யாழ்ப்பாணம், செப். 21
யாழ்ப்பாணம்-கைதடியில், வயலுக்கு வரம்புகட்டச் சென்ற குடும்பத்தலைவர் ஒருவர் நேற்று மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். 14

கனகராயன்குளம் விபத்து

## தலைமறைவாக இருந்த சந்தேகநபர்கள் கைது!

வாகனமும் பொலிஸாரால் மீட்பு

விரிவு பக்கம்:- 14



முச்சந்தி முரளி

‘இஞ்ச கிடங்கு வெட்டேக்க எலும்புக்கூடும், குண்டுகளும் வெளில வராட்டித்தான் புதினம் கண்டியளோ’




## எந்தவொரு சவாலுக்கும் நாம் அச்சப்படவில்லை!

### முன்னாள் ஜனாதிபதி ரணில் ஆவேசம்

கொழும்பு, செப். 21
எதிர்க்கட்சித் தலைவர்களை மௌனமாக்கி அவர்களைக் கைதுசெய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்தக் கைது நடவடிக்கைகளால் நாங்கள் அச்சப்படவில்லை. அனைத்தையும் துணிச்சலுடன் எதிர்கொள்வோம் - இவ்வாறு 14

சஞ்சீவி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 | திகதி 20.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4200 | சீட்டிழுப்பு இலக்கம் 1267 | சீட்டிழுப்பு இலக்கம் 0226 | சீட்டிழுப்பு இலக்கம் 2306 | சீட்டிழுப்பு இலக்கம் 5958 | சீட்டிழுப்பு இலக்கம் 1988 | சீட்டிழுப்பு இலக்கம் 0532 | சீட்டிழுப்பு இலக்கம் 0074 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கினம் துலாம் |
| | | | சுப்பர் இலக்கம் 20 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 06 07 49 72 | வெற்றி இலக்கங்கள் 05 08 15 51 | வெற்றி இலக்கங்கள் 6 6 6 8 | வெற்றி இலக்கங்கள் 06 09 52 58 | வெற்றி இலக்கங்கள் 9 9 8 3 3 1 | வெற்றி இலக்கங்கள் 15 54 55 61 | வெற்றி இலக்கங்கள் 8 3 3 1 | வெற்றி இலக்கங்கள் 05 09 26 36 |
| விரோ எழுத்து T | | | | | விசேட எழுத்து Y | | |

# உடையார்கட்டில் விபத்து குடும்பத்தலைவர் இறப்பு!

முல்லைத்தீவு, செப். 21

முல்லைத்தீவு உடையார்கட்டுப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார்.

குரவில் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளம் குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வெள்ளப்பள்ளம் வீதியில் இருந்து புதுக்குடியிருப்பு பரந்தன் முதன்மை வீதியை நோக்கிப் பயணித்த மோட்டார்சைக்கிளும், பரந்தன் பக்கமாக இருந்து புதுக்குடியிருப்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இறந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)

## காணி விற்பனைக்கு

கைதடிக்கும், நாவற்குழிக்கும் இடையில், A-9 வீதிக்கு மிக அருகில், காணியின் ஒருபக்கம் நீரேரியாகக் கொண்ட அறுதி உறுதிக்காணி 11 பரப்பு விற்பனைக்கு A-9 வீதியினை எவ்வித தடங்கலும் இன்றி பார்வையாகக் கொண்டதும், சுற்றிவர கம்பி வேலியால் சூழப்பட்ட காணி. தரகர் தேவையில்லை.

பார்வையிடும் நேரம்: காலை 09.00 - 04.00 மணி வரை

தொடர்பு: 077 886 6107

(CS 30275) E



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் 75ஆவது பிறந்த நாளை முன்னிட்டும், அவர் ஆலயத்துக்கு வருகைதந்து பத்து ஆண்டுகள் கடந்ததை நினைவுகூரும் முகமாகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை ஆலய ஆதீனக் கர்த்தா சிவஸ்ரீ. ந.ரங்கநாதக் குருக்கள் தலைமையில் சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-66,27)

**சுபிரி தன சம்பத**
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0666
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கம் 4 1 9 3 9 0

**Super Ball** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2932 | ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 26 45 48 73

**சனிதா** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து K | வெற்றி இலக்கம் 39 41 61 76 | வெற்றி வாரம் 5093

**SASIRI** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0774 | வெற்றி இலக்கம் 16 23 43

**லக்ன ராசி** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
தனுசு | வெற்றி இலக்கம் 02 19 20 43 | சீட்டிழுப்பு வாரம் 4644

**KAPRUKA** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து D | சுப்பர் இலக்கம் 05 | வெற்றி இலக்கம் 21 41 51 69 | வெற்றி வாரம் 2108

**அத கோடிபதி** DLB
திகதி 20.09.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 15 29 65 75 | வெற்றி வாரம் 2758

# எதிரணிகள் ஒன்றிணைவில் மகா கூட்டணி மலரும்!

## மனோ கணேசன் சூளுரை

கொழும்பு, செப். 21


எதிரணிகள் ஒன்றிணைந்து மகா கூட்டணி உருவாக்கப்படும். இது சூழ்ச்சி நடவடிக்கை அல்ல. ஜனநாயக ரீதியிலான வழிமுறையாகும். அதேபோல இது கள்வர்களின் கூட்டணியும் அல்ல என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் சூளுரைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு விழாவில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் சார்பில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிரணிகளை ஒன்றிணைப்பதற்கு நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதனை அரசாங்கம் விமர்சிக்கின்றது. சூழ்ச்சியெனவும் முத்திரை குத்தப்படுகின்றது.

எதிரணிக் கூட்டணியில் களவு, மோசடிகளுக்கு இடமில்லை. கள்வர்கள் யார், மோசடியாளர்கள் யார் என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்கவேண்டும் - என்றார். (ச-44)




# சட்டவிரோத மரக்கடத்தல்; சாவகச்சேரியில் முறியடிப்பு

யாழ்ப்பாணம், செப்.21

கொடிகாமம் பிரதேசத்தில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி மூடிய பாரவூர்தியில் மரக்குற்றிகளை ஏற்றிவந்த ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று சனிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸார் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த பாரவூர்தியை மறித்துச் சோதனையிட்டபோதே அனுமதிப்பத்திரமின்றி மரக்குற்றிகள் கடத்திவந்தமை தெரியவந்தது. இதன்போது பல இலட்சம் பெறுமதியான வேம்பு மற்றும் நாவல் மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. கைதுசெய்யப்பட்ட சாரதியை நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)



# மாநகரசபை முஸ்லிம் உறுப்பினர்கள் நாவாந்துறை சந்தையில் கள ஆய்வு!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நாவாந்துறைச் சந்தைத் தொகுதிக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மாநகரசபை உறுப்பினர்களான என்.எம்.அப்துல்லா, எம்.றொயிஸ் மற்றும் பி.எஸ்.எம்.சரபுலனாம் உள்ளிட்டோர் நேற்றுமுன்தினம் திடீர்க் களவிஜயம் மேற்கொண்டு பார்வையிட்டனர்.

இதன்போது சந்தைத்தொகுதிக் கடை நடத்துநர்களுடன் கலந்துரையாடியதற்கு அமைய, மீன்சந்தையின் கதவுகளுக்குப் பூட்டுகள் இன்றிக் காணப்பட்டமை, நீர் இணைப்புகள் காணப்படாமை, பாதுகாப்பான மின் இணைப்புகள் இன்மை, மரக்கறிச் சந்தை தொகுதியில் விற்பனையாளர்களுக்குப் போதிய இடவசதி இன்மை, இறைச்சிக்கடைத் தொகுதியில் மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கிநிற்கின்றமை உள்ளிட்ட பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன. குறித்த குறைபாடுகளை நிவர்த்திசெய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் மாநகரசபை உறுப்பினர்கள் உறுதியளித்தனர். (ச-20)

# ஹெரோய்ன் வியாபாரம்; இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட குருநகர்ப்பகுதியில்ஹெரோய்ன்போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 2 கிராம் 300 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த 22 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தியாகதீபம் திலீபனின் 6ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாகதீபத்தின் நினைவிடத்தில் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சுடரேற்றி, திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-41,66)

படங்கள்: ஐ. சிவசாந்தன்



# பேராசிரியர் பிரதீபராஜாவுக்கு சாகித்திய விருது

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா எழுதிய 'பிராந்திய காலநிலையியல்' என்னும் நூலுக்காகச் சிறந்த புலமைத்துவ ஆய்வு நூல் எனும் வகைப்பாட்டில் முதலாமிடம் பெற்றமைக்காகச் 'சாகித்திய விருது' வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு அலரி மாளிகையில் நடந்த 2025 ஆம் ஆண்டுக்கான அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் குறித்த விருது அவருக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நூல் வடக்கு மாகாண மக்களின் காலநிலையியல் தொடர்பான பாரம்பரிய அறிவு, வானிலைக் கணிப்பீடுகள், சமய நம்பிக்கைகள், பண்டிகைகள், விழாக்கள், மற்றும் பஞ்சாங்கம்கூறும் வானிலை தொடர்பான பல விடயங்களுக்குப் பின்னான அறிவியல் உண்மைகள், வடக்கு மாகாணத்தின் வானிலை விஞ்ஞான வரலாறு, வடக்கின் மழைவீழ்ச்சி, வெப்பநிலை, ஆவியாக்கம், ஈரப்பதன், அமுக்கம், வரட்சி, வெள்ளம், இடி மின்னல், சூறாவளி போன்றவற்றின் வரலாறு மற்றும் அறிவியல், வடக்கு மாகாணத்தின் எதிர்கால காலநிலையியல் எதிர்வுகூறல்கள், வடக்கின் நீர்வளம் மற்றும் காலநிலை மாற்றம் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய முழுமையான நூலாக அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-66)

# 'பிரஜாசக்தி' திட்டத்துக்கு சகலரும் ஒத்துழைப்போம்

## யாழ்.மாவட்டச் செயலர் அழைப்பு

**யாழ்ப்பாணம், செப். 21**

**யாழ். மாவட்டத்தில் பிரஜாசக்தி திட்டத்தினூடாக வறுமை ஒழிப்புச் செயற்றிட்டத்தை ஒன்றிணைந்து செயற்படுத்தமுடியும். அதற்குப் பிரதேச, கிராமமட்ட உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி அனைவரும் கைகோர்க்கவேண்டும் என்றும் யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன் அழைப்பு விடுத்துள்ளார்.**

நாடுமுழுவதிலுமுள்ள வறுமையை ஒழித்துச் சமூகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட 'பிரஜாசக்தி' வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் தலைமையில் அண்மையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டம்தொடர்பாக திணைக்களத்தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதாரத்தை மட்டும் வைத்து வறுமையைத் தீர்மானிக்கமுடியாது. அதனுடன் இணைந்ததாகக் கல்வி, சுகாதாரம், சிறந்த வாழ்க்கைத்தரம், மனப்பாங்கு போன்றன முக்கியமான கருப்பொருள்களாக அமைந்துள்ளன.

அரசாங்கத்தின் வறுமை ஒழிப்புச் செயற்பாட்டில் முக்கியமானதாக பிரஜாசக்தி திட்டம் காணப்படுகிறது. 'வளமான நாடு அழகான வாழ்க்கை' எனும் தொனிப்பொருளில் இந்தப் பிரஜாசக்தி செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதன்மூலம் வறுமையை முற்றாக ஒழிக்கமுடியாவிட்டாலும் அதனைக் குறைத்துக் கொள்ளக்கூடிய ஏது நிலை உருவாகும் - என்றார். (ச-66)

# கௌரவிப்பு நிகழ்வு மல்லாகத்தில்

யாழ்ப்பாணம், செப். 21

மல்லாகத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளில் நிர்வாகிகளாகச் சிறப்பாகச் சேவையாற்றியவர்கள் மற்றும் கிராமத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக அமைந்துள்ள தனியார் காணியில் பொறியியலாளர் தனராஜா ஜெனி நெல்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.செல்வக்குமாரி நேசரட்ணம் பிரதம விருந்தினராகவும், ஜே/214 கிராம அலுவலர் திருமதி அமலதாஸ் விஜிதா, ஜே/213 கிராம அலுவலர் சிவபாதம் சுமந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)



# தருமபுரத்தில் வீட்டின் பின்புறமிருந்து 18 கிலோ கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி மாவட்ட தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பகுதியிலுள்ள வீடொன்றின் பின்புறத்தில் பாவனையற்ற மலசலகூடத்தில் மறைத்துவைக்கப்பட்ட நிலையில் 18 கிலோ 500 கிராம் கேரளக் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக நேற்று சனிக்கிழமை கிளிநொச்சி விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் குறித்த கஞ்சா மீட்கப்பட்டது. அவை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகத் தருமபுரம் பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-113,20)

# மருத்துவர் மீது தாக்குதல்; மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 21



உரும்பிராய் பகுதியில் வைத்து மருத்துவர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 17 ஆம் திகதி அன்று இரவு மருத்துவர் ஒருவர் உரும்பிராய் சந்தியில் பயணித்துக்கொண்டிருந்தபோது அவர்மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் காயமடைந்த மருத்துவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை நாளை திங்கட்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-27)

# புரட்டாதிச்சனி வழிபாடு

யாழ்ப்பாணம், செப். 21

புரட்டாதி முதல் சனி விரதத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை சிவாலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. சனீஸ்வர பகவானுக்கு காலையில் சிறப்புப்பூஜை மற்றும் சிறப்பு அபிஷேகம் என்பன இடம்பெற்றன.

சட்டிகளில் எள்ளுப் பொட்டலங்கள், நெய் தீபம் ஏற்றும் நிகழ்வும் இடம்பெற்றன. வண்ணைசிவன் கோவில், வண்ணை வெங்கடேஸ்வரர் வரதராஜப் பெருமான் ஆலயம், நல்லூர் சிவன் கோவில் மற்றும் நல்லூர் சட்டநாதர் ஆலயம் போன்ற சிவாலயங்களில் பெருமெண்ணிக்கையான மக்கள் சனி விரத வழிபாடு பூஜையில் கலந்துகொண்டனர். (ச-41-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்தை வாய்ப்பின்றி விவசாய உற்பத்திகள்

## முல்லைத்தீவில் அவலம்





முல்லைத்தீவு, செப். 21

**தமது விவசாய உற்பத்திப்பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் நீண்ட காலமாக இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக முல்லைத்தீவு கரை துறைப்பற்றுப் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

குறித்த கிராமங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற வத்தகை, நிலக் கடலை, சோளம் உள்ளிட்ட உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்தமுடியாது பெரும் பாதிப்புகளுக்குள்ளாகியுள்ளோம்.

இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து உற்பத்திசெய்யப்படுகின்ற விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கு உரிய வழிவகைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்களின் அழைப்பை ஏற்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் விரைவில் நாட்டில் ஆயிரம் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை நிறுவத் திட்டமிட்டுள்ளநிலையில் அவற்றில் மூன்றைக் குறித்த பகுதிகளில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். (ச-246,26)

# கட்டாக்காலிக் கால்நடைகள் கட்டுப்படுத்தவேண்டும்!

## வலி.மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 21

வீதியோரங்களில் கட்டப்படுகின்ற கால்நடைகளுக்கும், கட்டாக்காலியாக வீதிகளில் திரிகின்ற கால்நடைகளுக்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் ஜெ.துவாரகா சபையில் கோரிக்கை முன்வைத்தார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தவிசாளர் ச.ஜயந்தன் தலைமையில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கால்நடைகளை அதன் உரிமையாளர்கள் நீண்ட கயிறுகளில் வீதியோரங்களில் கட்டுகின்றனர். இதனால் அந்தக் கால்நடைகள் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் செல்லும்போது அந்தக் கயிறு வாகனங்களில் சிக்குவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. அத்துடன் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் அதிகளவில் சுற்றித்திரிகின்றன. எனவே இவை தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார். (ச-27)



யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிச்சங்கம் வருடாந்தம் நடத்தும் குருதிக்கொடை நிகழ்வு இம்முறையும் கடந்த வெள்ளிக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் புள்ளி விவரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளருமான ம.வித்தியானந்தநேசன் தலைமையில் இடம்பெற்றது. (ச-17-9)

# துறையூர் மீன்சந்தையில் வரி அறவீடு செய்வதா?

## விசேட குழு நியமித்து தீர்வுகாணத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 21

வேலணை துறையூர் மீன்சந்தையின் வரி அறவீடு குறித்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கடும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் விசேட குழுவொன்றை அமைத்துத் தீர்வைப் பெறுவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

வேலணைப் பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது துறையூர் மீன்சந்தையின் குத்தகை மற்றும் வரி அறவீடு குறித்து ஆராயப்பட்டபோது, பிரதேசசபையினர் வரி அறவீடு செய்ய வலியுறுத்தியதுடன் அதுதொடர்பிலான சுற்றுநிருபங்களையும் காண்பித்தனர். இதன்போது சந்தையின் சார்பாக பங்கேற்ற பிரதிநிதிகள், குறித்த சந்தை இறங்குதுறை என்றும் தாம் வரி அறவீட்டை எதிர்ப்பதாகவும் தமது அறுவடை மீன்களை விற்க இலவசமாக அனுமதிக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதனால் இரு தரப்பினருக்குமிடையே வாக்குவாதம் முற்றியநிலையில் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. அதனையடுத்து குறித்த சந்தையின் பிரச்சினைக்குப் பிரதேச செயலர், பிரதேசசபைத் தவிசாளர் ஆகியோர் தலைமையில் கடற்றொழில் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து விசேட குழு ஒன்றை அமைத்து ஆராய்ந்து தீர்வை எட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அறிவுறுத்தினார். (ச-27)



# பேராசிரியர் துரைராஜாவுக்கு திருநெல்வேலியில் சிலை!

## நல்லூர்ப் பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம்,செப்.21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவின் உருவச் சிலையை, திருநெல்வேலிச் சந்தியில் நிறுவுவதற்கு நல்லூர்ப்பிரதேசசபையில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தேசப்பற்றோடும், மக்கள் மனித நேயத்தோடும் தமிழ் மண்ணுக்கும், மக்களுக்கும் மாமனிதர் துரைராஜா தன்னலமற்றுப் பணியாற்றியவர். அவ்வாறானவர்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்கள் என்பதை எமது அடுத்த தலைமுறைக்குச் சொல்லவேண்டியதன் அடிப்படையில், பல்கலைக்கழகச் சூழலில் திருநெல்வேலிச் சந்தியில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் அல்லது பல்கலைக்கழக மருத்துவப் பீடத்துக்கு முன்பாக உள்ள நடைபாதைக்கு அருகில் சிலையை நிறுவுவதற்கான இடத்தைத் தெரிவுசெய்யலாமெனத் தவிசாளர் தெரிவித்தார்.

இதனை நல்லூர்ப் பிரதேசசபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டதையடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-66,27,26)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.21

நாகர்கோவில் அருள்மிகு பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறவுள்ளது. எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமை பாம்புத் திருவிழாவும், 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கப்பற் திருவிழாவும், 8ஆம் திகதி புதன் கிழமை வேட்டைத் திருவிழாவும், 9ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சமுத்திரத்தீர்த்தத்திருவிழாவும், 11ஆம் திகதி சனிக்கிழமை கேணித் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும் என ஆலயப் பரம்பரைநம்பிக்கைப் பொறுப்பாளரும் பரிபாலன சபையினரும் அறிவித்துள்ளனர். (ச-41-100)



# வல்வெட்டித்துறையில் குருதிக்கொடைமுகாம்

யாழ்ப்பாணம், செப்.21

இறுதிவரை குருதிக்கொடைக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அமரர். துரைசாமி சக்திவேலின் முதலாம் ஆண்டு நினைவாக வல்வெட்டித் துறை இரத்ததானச் சங்கமும், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குருதிக்கொடை வழங்குபவர்களில் குருதிக்கொடையாளரொருவர் தெரிவு செய்யப்பட்டு அன்றைய தினமே பெறுமதியான வெள்ளிப்பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்படுவதுடன் குருதிக்கொடை வழங்கும் அனைவருக்கும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

குருதிக்கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் 0779911131 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்தி முன்பதிவு செய்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

பரப்பு : 01, 02, 2 1/2
பலாலி வீதி : 75 மீற்றர்
திருநெல்வேலி சந்தி : 300 மீற்றர்

தொடர்பு: 077 253 2575

## விற்பனைக்கு

25, 15, 03, 02, 01,Hp
பாவித்த மின்மோட்டார்களும்
Scootypept Schooter
விற்பனைக்கு உண்டு.
விபரங்களுக்கு

தொடர்பு: 077 868 9705

(CS/59426) UK

## காணி தேவை

வலிகாம பிரதேசத்தில் 10 - 30 பரப்பு வரையிலான தோட்ட அல்லது தென்னந்தோட்டக் காணி தேவை. உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்க

தொடர்புகளுக்கு:
077 669 2415 / 076 143 4393

(CS 59419) E

## Play the Keys
## Play Your Dreams!

- சுவாரஸ்யமான, படிப்படியாகக் கற்றுத்தரும் பாடங்களின் மூலம் உன் இசைத் திறமையை வெளிப்படுத்து.
- தொடக்க நிலையிலிருந்து மேம்பட்ட நிலை வரை.
- உங்களுக்கு பிடித்த பாடல்களை இயக்கவும்
- தன்னம்பிக்கையும் படைப்பாற்றலும் வளர்த்து கொள்.

0777992769

Start your journey today-
Play the music you love!










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக் கவும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத் துடன் ஈடுபடவேண்டிய நாள். எதிலும் பொறுமை அவசியம். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக் கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற் பட்ட மனஸ்தாபங்கள் நீங்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். உடல் ஆரோக்கி யம் மேம்படும். அரசாங்கவகையில் எதிர் பார்க்கும் காரியம் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள் வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத் தில் செல்லும்போது சற்றுக் கவனமாகஇருக் கவும்.

**சிம்மம்:** மனதில் சிறு குழப்பம் ஏற்பட்டுநீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறி யாகும்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அனுசரித்துச்செல்வது நல்லது. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதற்கு ஏற்ற நாள். சகோதரவகையில் மகிழ்ச்சியுடன் ஆதாயமும் உண்டாகும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும். வாகனத்தில் செல்லும்போது கவனம்தேவை.


**தனுசு:** தேவையான பணம் இருப்பினும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவும்நேரிடும். தாய்மாமன்வழியில் செல வுகள் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக் குகள் நீங்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கும்பம்:** அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்து விடும். தந்தைவழியில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுடன் திடீர்செலவு களும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்களுடன் இணக்கமான அணுகுமுறை அவசியம். இலாபம் அதிகமாக இருக்கும்.

# வல்லிபுர மாயவருக்கு கொடியேற்றம் இன்று





■ மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

ஈழத்தை அலங்கரிக்கின்ற திருக்கோயில்களில் வடமராட்சியில் அமைந்த வல்லிபுரக்கோயில் ஓர் உன்னதமான இடத்தை வகிக்கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று அங்கங்களினாலும் பெரும் சிறப்புப்பெற்று விளங்குவது வல்லிபுரக் கோயில். யாழ். குடா நாட்டின் வடகீழ்ப் பகுதியை அண்டிய கடற்கரையை தனது தீர்த்தக்கரையாகக்கொண்டு விளங்குகிறது இவ் வாலயம். ஆலயம் அமைந்துள்ள மணற்பாங்கான பிரதேசமும் அதன் அருகில் உள்ள கடலும் ஆலயத் துக்கு அழகூட்டிநிற்கின்றன. ஈழத்தமிழர்கள் மட்டுமன்றி உலகத்தமிழர்களின் வரலாற்றில் சிறப்புப்பெற்ற கோயில்களுள் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயி லும் ஒன்று.

**'மூலாலயத்தின் சக்கரம்'**

மூலக்கருவறையில் சக்கரத்தை வைத்து வழிபடும் ஒரேயொரு திருத்தலமாக இவ்வாலயம் விளங்குகின்றது. காத்தல் கடவுளான ஸ்ரீ மந் நாராயணருக்கு அமைந்த ஆலயங்கள் 5 ஆகும். இந்தப் பஞ்சாயுதங்களே நாரா யணருக்குத் திவ்ய ஆபரணங்களாக விளங்குகின்றன. நாராயணருக்கு வைகுந்தத்திலிருந்து பணி செய்வதே பஞ்சாயுதங்களின் பெரும்பேறாகும்.

**சுதர்சனமே விஷ்ணு**

சுதர்சனமேவிஷ்ணுவாகும். விஷ்ணுவேசுதர்சனமாகும். சுதர்சன சக்கரமானது இறைவனைப் போலவே ஆதி யந்த மெதுவுமில்லாதது ஆகும். சுதர்சன வழிபாட்டின் முக்கியமான நோக்கில் பரம்பொருளை சக்கர யந்திர வடிவில் அமர்த்தி வழிபடுதேலே ஆகும்.

**வல்லிபுரம்**

யாழ்ப்பாண அரசின் தலைநகரமே வல்லிபுரம். வல்லி புரம் என்ற பெயர் மாயவனின் கோயில் அமைந்துள்ள இடத்திற்கு எவ்வாறு ஏற்பட்டது எனப் பலவிதமான கார ணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நாகர்க ளுடைய ஆட்சி கி.பி 303இலும் லம்பகர்னன் ஆட்சி 556இலும் முடிவிற்கு வந்தது என்பது வரலாற்று ஆசிரி யர்களின் கருத்தாகும். இப்பகுதியில் குடியேறிய படை வீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கிய போது வடமறவர்கள் ஆட்சிசெய்த இடம் வடமராட்சி எனப்பட்டது. 'வல்லி' என்ற சொல்லுக்கு ஆயர்பாடி என்ற ஒரு கருத்தும் புரம் என்றால் கோவில் என்றும் பொருள் கொள்ளமுடியும். எனவே வல்லிபுரம் என்பது ஆயர் பாடிக் கோயிலாகவும் கண்ணன் வளர்ந்த இடமாகவும் கொள்ளப்படுகின்றது.



தேசிய உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையினால் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கலை, இலக்கிய, ஓவியப்போட்டிகள் நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி நகரசபை பொதுநூலகத்தில் இடம்பெற்றன. (ச-28)

# நவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப்.21

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூஜை வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை விஜயதசமியுடன் நிறைவுபெற வுள்ளன. அன்றையதினம் மாலை 5மணிக்கு மானம்பூ உற்சவம் இடம்பெறும். (ச-41-17)

✦✦✦✦

யாழ்ப்பாணம், செப்.21

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆல யத்தில் நவராத்திரி பூஜை வழிபாடுகள் நாளை திங்கட்கிழமை மாலை 4மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறவுள்ளன. எதிர்வ ரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கன்னி வாழை வெட்டும் நிகழ்வு இடம்பெறும். (ச-41-17)

யாழ்ப்பாணம், செப்.21

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத் தில் நவராத்திரி பூஜையை முன்னிட்டு நாளை திங் கட்கிழமை சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற வுள்ளன. தொடர்ந்து நவராத்திரி பாமாலைப் படிப் பும் நடைபெறும். (ச-41-17)

✦✦✦

நீர்வேலி தெற்கு முருகையா ஆலயத்தில் நவராத் திரி பூஜையை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை முதல் தினமும் மாலை 4மணிக்கு முருகப்பெருமா னுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடு கள் என்பன இடம்பெறும். 11 நாள்கள் நடைபெறும் பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து நவராத்திரி பாமாலை படிப்பும் நடைபெறும் என ஆலயப் பரி பாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மீனுக்கொரு நீதி, தமிழர்களுக்கொரு நீதியா?

இலங்கை அரசு நான்கு 'ஆக்கிரமிப்பு அலங்கார மீன்' இனங்களின் இறக்குமதி, விற்பனை மற்றும் பராமரிப்பை சமீபத்தில் தடைசெய்துள்ளது. பிரன்ஹா, கத்தி மீன், முதலை கார் மற்றும் ரெட்லைன் பாம்புத் தலை போன்ற மீன்கள் இலங்கையின் இயற்கை நீர்நிலைகளில் வேகமாகப் பரவி, சுற்றுச்சூழல் சீர்குலைவை ஏற்படுத்தக்கூடியவை என்பதே இந்தத் தடைக்கான பிரதான காரணம். இந்த ஆக்கிரமிப்பு மீன்கள் மீதான தடை உத்தரவானது, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அக்கறையை வெளிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. சுற்றுச்சூழல் தொடர்பான அக்கறையின்படி இந்தத் தடை வரவேற்கப்படவேண்டியதுதான்.

ஆனால், அதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் , தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள்மீது நடைபெறும் மனித ஆக்கிரமிப்புகளை எதிர்ப்பதில் அதே வீரியத்தைக் காட்டுவதில்லை என்பதுதான் நகைமுரணான விடயம். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்களான முந்திரிகைக்குளம், ஆமையன்குளம், சாம்பான்குளம் போன்ற பகுதிகளில், தமிழர்களின் விவசாய நிலங்கள் அத்துமீறிக்குடியேற்றப்பட்ட சிங்கள மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த ஆக்கிரமிப்புகளும், அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களும் அரசாங்கத்தினதும், அரச நிர்வாக இயந்திரத்தினதும் மௌன ஒப்புதலுடனோ அல்லது நேரடி ஆதரவுடனோ நடைபெறுவதாக தமிழ்மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். தமிழ் விவசாயிகள் தங்கள் பூர்வீக நிலங்களில் விவசாயம் செய்ய முயலும்போது, வனவளத்திணைக்களத்தினரும், பொலிஸாரும் அவர்களுக்கு இடையூறு விளைவிப்பது ஒரு தொடர் நிகழ்வாக மாறியுள்ளது. இவ்வாறு வனவளத்திணைக்களம், பொலிஸ் ஆகிய தனது நிர்வாக இயந்திரங்களின்மூலம் தமிழ் மக்களுக்குக் குடைச்சல் கொடுத்து, அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அங்கே சிங்கள மக்களை அத்துமீறிக் குடியேற்றுவதையே சிங்களப் பேரினவாத அரசாங்கங்கள் காலதிகாலமாகக் கைக்கொண்டுவருகின்றன. அதற்குத் திசைகாட்டி அரசாங்கமும் விதிவிலக்கல்ல.

ஆனால் மீனுக்கொரு நியாயம், தமிழர்களுக்கொரு நியாயம் என்ற இந்த இரட்டை நிலைப்பாட்டை நாம் கவனிக்காமல் இருக்கமுடியாது. சூழலுக்கு ஒவ்வாத மீன்களின் ஆக்கிரமிப்பு தடுக்கப்படவேண்டும் என்பது உண்மைதான். ஆனால், தமிழ் மக்களின் வாழ்வாதாரம், பாரம்பரியம், பண்பாடு என்பன ஊறிக்கிடக்கும் பூர்விக நிலங்களை ஆக்கிரமிப்பது அதைவிட மோசமான அச்சுறுத்தலாகும். எனவே, இலங்கை அரசாங்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஆக்கிரமிப்பு மீன்களுக்கு தடைவிதிப்பதில் காட்டும் உறுதியை, தமிழ் மக்களின் நில உரிமைகளைப் பாதுகாக்கவும் பயன்படுத்தவேண்டும். ஆக்கிரமிப்பு மீன் இனங்கள் மீது தடைவிதிப்பது போலவே, தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். நிலத்தின் மீதான தமிழர்களின் பூர்வீக உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும், மேலும் அவர்களின் விவசாய நடவடிக்கைகளைத் தொடர அனுமதிக்கும் வகையில் பாதுகாப்பான சூழலும் உருவாக்கப்படவேண்டும். இதுவே நிலையான அமைதி மற்றும் முன்னேற்றத்திற்கான வழியாகும்.



செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : NEWS@UTHAYAN.COM
விளம்பரம் : ADVT@UTHAYAN.COM


### நாளொரு நல்வார்த்தை

முன்னேறவேண்டுமானால் உங்கள் கால்களால் நடந்துபோங்கள்.

பிறர் முதுகின் மேல் சவாரி செய்யாதீர்கள்.

— காஸ்ட்ரோ—




## சிறுவர் துஷ்பிரயோகங்கள் இணையவழியில் உயர்வு!!



**கொழும்பு, செப்.21**

**இணையவழி மோசடிகள்மூலம் ஏற்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார்.**

2025ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் இணையவழி மோசடிகள்மூலமாக சுமார் 28 சிறுவர்களும் 118 பெண்களும் பாலியல்துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளனர் என பதிவாகியுள்ளது. 2024 ஆம் ஆண்டில், 18 வயதுக்குட்பட்ட 15 சிறுவர்கள் சைபர் ஸ்ஸ் மூலம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ளனர்.

அதேவேளை 2024ஆம் ஆண்டில், இணையவழி மோசடிகள் மூலம் 375 பெண்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்ட 114 பேர் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

## விபத்தில் யாசகர் உயிரிழப்பு

அநுராதபுரம். செப்.21

அநுராதபுரம் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் யாசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கார் ஒன்று வீதியில் இருந்த யாசகர்மீது மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்துத் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## பொலிஸார் மீதான முறைப்பாடுகள் உயர்வு

கொழும்பு. செப்.21

பொலிஸார் தொடர்பிலான முறைப்பாடுகளைப் பதிவுசெய்யும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட வட்ஸ்அப் இலக்கத்துக்கு இதுவரை 9 ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.


குறித்த முறைப்பாடுகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸார் தொடர்பிலான முறைப்பாடுகளை உடனடியாக தெரிவிக்க பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய 0718598888 எனும் வட்ஸ் அப் எண்ணை அறிமுகப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பெண்ணொருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, செப்.21

மட்டக்களப்பு கோட்டைக்கலாறுப் பகுதியில் வீடு ஒன்றிலிருந்து பெண்ணொருவர் சடலமாக நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளார். மூன்று பிள்ளைகளின் தாயான 57 வயதுடைய பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த பெண் காப்புறுதி நிறுவனமொன்றில் பணியாற்றிவருகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



## முன்னாள் எம்.பி. கனகசபை மறைவு

கொழும்பு, செப்.21

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தன்மன்பிள்ளை கனகசபை நேற்றுமுன்தினம் வயது மூப்புக் காரணமாக காலமானார்.

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த இவர் அவரது 86 ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

இவர், 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிட்டு, அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை

திங்கட்கிழமை - புரட்டாதி 6

22.09.2025

சுபநேரம் : 09.02 - 10.32

ராகுகாலம் : 04.32 - 06.02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி வாரத்தில்

## யாழ்.பொதுசன நூலகத்தில் சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.21


உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.பொதுசன நூலகத்தில் இன்று பல நிகழ்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று மு.ப 10.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை தொல்பொருள் கண்காட்சியும், ஆவணப்படுத்தல் தொடர்பான விளக்கமளித்தலும் இடம்பெறும்.

அத்துடன் சிறுவர் நூல்களைக் காட்சிப்படுத்தல், நூல்களை அறிமுகம் செய்தலும், நூல் விமர்சனமும் இடம்பெறும். இதேவேளை திருநெல்வேலி யுசிமாஸ் நிறுவனத்தின் இயக்குநர் திருமதி ராதை பாஸ்கரன் தலைமையில் சிறுவர் ஆளுமை விருத்தி நிகழ்வுகளும், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் த.அருணகிரி தலைமையில் சதுரங்க விளையாட்டு மற்றும் அமெரிக்கன் கொனர் நிறுவனத்தால் கதைநேரம் போன்ற நிகழ்வுகளும் நடத்தப்படும். இதேவேளை "அறிவோடு விளையாடு" எனும் தொனிப்பொருளில் வயது வேறுபாடின்றி புதிர்ப் போட்டிகள் நடைபெறும். சதுரங்கப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் அதற்குரிய உபகரணங்கள் இருப்பின் கொண்டுவருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# கொழும்புத்துறை இறங்குதுறை ரூ. 140 மில்லியனில் புனரமைப்பு

பணிகள் ஆரம்பம்



**யாழ்ப்பாணம், செப். 21**

**கொழும்புத்துறை இறங்குதுறை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் 140 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படவுள்ளது.**

அதன் பணிகளை யாழ்.மாவட்டத்துக்கு வருகைதந்த போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்துவைத்தார்.

நீண்டகாலமாகத் துறையின் பாதை கடலரிப்பினால் இருபுறமும் சிதைவுற்ற நிலையிலும், முனையம் மூன்று பக்கமும் மண்ணரிக்கப்பட்டுச் சிதைவடைந்தாயும் காணப்படும்நிலையில் குறித்த துறைக்கான பாதை அகலப்படுத்தலுடன் முனையம் சீர்ப்படுத்தலும் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந் தராசா, ஜெ.றஜீவன், மாநகரசபை உறுப்பினர்கள், கடற்றொழில் அமைச்சின் செயலர், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-17,20)

## வேலையாள் தேவை

81 வயது முதியவரை (ஆண்) பராமரிப்பதற்கு பகுதிநேரமாகவோ அல்லது முழுநேரமாகவோ ஆள் தேவை. வீடு மற்றும் தோட்ட வேலை செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது.
ஆண்கள் / தம்பதிகளும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-
சிறுவிளான், இளவாலை, யாழ்ப்பாணம்.

077 323 0107, 021 224 3925

(CS/59454) J-1




## சமாதானத்துக்கான நடைப்பவனி

கிளிநொச்சி, செப். 21

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் அனுசரணையுடன் உலக சமாதான தினத்தை முன்னிட்டு நடைபவனியொன்று நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட் டது.

இந்த நடைபயணம் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இருந்து அமைதி வழியாக ஆரம்பமாகி கிளிநொச்சி பேருந்து நிலையம் வரை சென்றடைந்தது. தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்கள் பல்வேறு பட்ட சமாதான எண்ணக் கரு தாங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் நடைபயணத்தில் பங்கேற்றனர். நடைபயணத்தில் இளைஞர்கள், மதகுருமார்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-113,27)

# பாடசாலைப் பேருந்தில் பாலியல் வன்கொடுமை

10 ஆண்டுகளின் பின் சாரதிக்கு கடூழியச்சிறை!

கொழும்பு, செப்.21

10 ஆண்டுகளுக்கு முன்னர் பாடசாலை பஸ்ஸில் 4ஆம் வகுப்பு மாணவியைப் பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்துக்காக அதன் சாரதிக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித் துள்ளது.

குற்றவாளியான ஒரு பிள்ளையின் தந்தை பாதிக்கப்பட்டவருக்கு 30,000 ரூபா அபராதமும் 5 இலட்சம் நஷ்டஈடும் வழங்கவேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். சம்பவத்தில் குறித்த மாணவியே பேருந்திலிருந்து கடைசியாக இறங்குவதால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சாரதி இனிப்புகள் கொடுத்து மாணவியை வன்கொடுமை செய்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 10 . 1927

மறைவு 20 . 09 . 2025

### தர்மலிங்கம் இராசமணி

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் இராசமணி அவர்கள் நேற்று (20.09.2025) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னப்பு - சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர் தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணேசரத்தினம், அரியராசா, செல்வராசா மற்றும் புஸ்பலீலாவதி, மகேஸ்வரன், சிவயோகமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, தம்பியையா, இராசம்மா ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற சிவகுமாரன் (ராசு வாத்தியார், ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஜெயக்குமார் மற்றும் செல்வக்குமார் (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நளாயினி (கலா), சோமரஞ்சினி (சாந்தினி) ஆகியோரின் மாமியாரும், ஜெயராம் - பிரவீனா, ஹரியன், அரிகரன், கோகுலராம், செல்வன்யா-கோபிதாஸ், சேவித் ஆகியோரின் பேர்த்தியும், அவிநேஷ், விஜித், அன்விதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"குமரஸ்தான்"
செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தலும் தசாக கிருஹயக்ஞ அழைப்பும்



தோற்றம் 10 . 09 . 1937

மறைவு 18 . 09 . 2025

### அமரர் பிரம்மஸ்ரீ. தம்பி ஐயா சோமஸ்கந்த சர்மா (ஜானகி ஐயா )

சண்டிலிப்பாய் ஆழங்குழாய் முருகமூர்த்தி ஆலயத்தினை பிறப்பிடமாகவும், வியாபாரி மூலையை வசிப்பிடமாகவும், தற்போது கோண்டாவில் கே. கே. எஸ். வீதியினை விதிவிடமாகக் கொண்டவருமான பிரம்மஸ்ரீ. தம்பி ஐயா சோமஸ்கந்த சர்மா (ஜானகி ஐயா ) (18.09.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா மற்றும் - சேசாம்பாள் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாம்பசிவக்குருக்கள் (நயினாதீவு) மற்றும் யோகாம்பாள் தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஆலங்குழாய் செல்லத்துரைக்குருக்கள், தியாகராஜ சர்மா மற்றும் விக்னராஜக்குருக்கள் ஆகியோரின் அன்பு சகோதரனும், நகுலேஸ்வரியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற சாந்தி, சாந்தரூப சர்மாவின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற Dr.சிவமனோகரன், தாரிணியின் அன்பு மாமனாரும், ஹரித்வர்ணன், ஹரிணி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை (18.09.2025) அன்று அவரது இல்லத்தில் பிற்பகல் ஒரு மணி அளவில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

புரட்டாதி மாதம் 26.09.2025 வெள்ளிக்கிழமை தசாகம் முற்பகல் 10.00 மணி
புரட்டாதி மாதம் 27.09.2025 சனிக்கிழமை ஏகோதிஸ்டம் மாசிகம்
புரட்டாதி மாதம் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை சபிண்டீகரணம்
புரட்டாதி மாதம் 29.09.2025 திங்கட்கிழமை கிருஹயக்ஞம்

மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், திங்கட்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு பிரார்த்திக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தொடர்பு: சோ.சாந்தரூப சர்மா**
**1679,K.K.S. Road, Kondavil**
**0777742221**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 10 . 1957

மறைவு 19 . 09 . 2025

### காசிப்பிள்ளை இராசரத்தினம்

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், பிள்ளையார்குளம் கல்மடுநகரை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள் கடந்த (19.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, நடராசா, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி அவர்களின் அன்புச் சகோதரரும், சயந்தன் (கரும்புள்ளியான்), ஜெயதர்சினி (சுவிஸ்), யுகநாத் (ஆசிரியர் கிளி/ தருமபுரம் மத்திய கல்லூரி), சனோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி, காலஞ்சென்ற ராஜ்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிசன், விதுசன், சர்மிகா, சர்மிகன், அக்ஷஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், வரதலட்சுமி, புஸ்பமலர், தனுஸ்கோடி, வசந்தி காலஞ்சென்ற லோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2025) திங்கட்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பிள்ளையார்குளம்**
**கல்மடு நகர்.**

(CS/30411) JK

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 10 . 1955

மறைவு 20 . 09 . 2025

### திருமதி தவராணி பரமானந்தம்

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவராணி பரமானந்தம் அவர்கள் நேற்று (20.09.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (பண்டிதர்)-இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், பரமானந்தம் (Director-Sigiri Wearing Mils) அவர்களின் அன்பு மனைவியும், வைஷ்ணவி, சாம்பவி (Associate Tech Lead-DMS Software Technology: Srilankan Airlines), Dr.சௌமியன் (Medical Officer-Chavakachcheri Hospital) ஆகியோரின் பாசமிகு தாயாரும், Dr.மணிகரன் (Consultant Interventional Radiologist-Colombo National Hospital) அவர்களின் பாசமிகு மாமியாரும், சகஸ்ரா, சாத்விகியின் அன்பு பேர்த்தியும், உஷாதேவி, வேதநாயகன், கேதீஸ்வரன், மனோகரி, திவாகரி, தயாநிதி, கலாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் பார்வைக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு மதியம் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 02.00 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**பரமானந்தம்-077 739 8936**
**வைஷ்ணவி-077 393 8019**
**சாம்பவி-071 871 3969**
**சௌமியன்-[illegible]**
**மணிகரன்-077 408 4883**

**35A, மகேஸ்வரி றோட்,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு-6.**

## மரண அறிவித்தல்



### வைரவநாதன் யோகராணி

அராலி தெற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவநாதன் யோகராணி கடந்த 19.09.2025 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா வைரவநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தனலட்சுமி தம்பதியரின் அன்பு புதல்வியும், நடராசா - காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், சுரேந்திரன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), விஜயமலர் (ஜேர்மனி), கனேந்திரன் (Abans Manager - சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும், மேனகா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடங்கள் திணைக் களம், கிளிநொச்சி), சஞ்சீவ்குமார் (ஜேர்மனி), றஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆராதனா, ஆர்த்தனா, பிரதாப், அபிலாசினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**077 3763 503**
**076 3258 821**


**தகவல்:**
**குடும்பத்தினர்.**
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

(CR 30280) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 01 . 1996



மறைவு
19 . 09 . 2025

## சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள் சாருஜன் (சாரு) (BA,MA)

**(ஏழாலை மயிலங்காடு அருமன்பதி ஞான வைரவர் ஆலய குரு)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள் சாருஜன் (சாரு) அவர்கள் கடந்த (19.09.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள் (ஏழாலை மேற்கு மடத்துப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு) - விசாகினி (துஷா) (வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை வதிரி முன்பள்ளி ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், சியாமளன் (ஏழாலை மேற்கு தோப்பு ஞான வைரவர் ஆலய பிரதமகுரு) அவர்களின் பாசமிகு சகோதரரும், ஆரபி (கனடா) அவர்களின் மைத்துனரும், சண்முகராஜா-வசந்தா தம்பதியரின் பேரனும் மற்றும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- கருனேஸ்வரி தம்பதியரின் பேரனும், பாலரூபன் (வலி மேற்கு பிரதேசசபை), டில்சானா (கல்வி அமைச்சு-வடக்கு மாகாணம்) தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.09.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி (மானிப்பாய்) இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**




# மன்னார் வளைகுடாவில் கடற்பசு சடலமாக மீட்பு

மன்னார் வளைகுடா கடற்கரைப் பகுதியில் கடற்பசுவொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

கடற்பசு சடலமாக கரையொதுங்கியதை அவதானித்த மீனவர்கள் அது தொடர்பில் வனத்துறையினருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வனத்துறையினரும் கால்நடை மருத்துவர்களும், கடற்பசுவில் இருந்து மாதிரிகளைச் சேகரித்ததுடன், அதை கடற்கரை மணலில் புதைத்துள்ளனர். (ம-56)

# மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 01 . 1945



இறப்பு
20 . 09 . 2025

**அமரர் மாணிக்கம் மகாலிங்கம்**
**(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சங்கானை)**

பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மகாலிங்கம் அவர்கள் (20.09.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-சரஸ்வதி தம்பதியினரின் ஏக புத்திரனும், அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், கஜன், மகிந்தன், அனுசியா, பிரசாத், பிறேம்நாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செபஸ்ரினா, மாஜினி, சந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மானேஸ், அஜேஸ், மதுரிகன், சானுகா, சந்தோஷ், சஞ்சாய், சகானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 983 2366**

# மரண அறிவித்தல்



## பிரம்மஸ்ரீ. நடராஜ ஐயர் ஜெயராஜக் குருக்கள்

கே.கே.எஸ் வீதி கோண்டாவில் மேற்கை பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ. நடராஜ ஐயர் ஜெயராஜக்குருக்கள் 12.09.2025 வெள்ளிக்கிழமை சிவப்பிராப்தி அடைந்தார் என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

அன்னார் அமரர்கள் பிரம்மஸ்ரீ. ஸ்ரீமதி நடராஜ ஐயர் - நாகபூசணி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஸ்ரீமதி உமாராணி மஹாலிங்க ஐயர், பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த குருக்கள், பிரம்மஸ்ரீ உமாகாந்த சர்மா, ஸ்ரீமதி இந்துமதி சிவகுமாரன், பிரம்மஸ்ரீ ரமேஷ், பிரம்மஸ்ரீ கிரிதரன், ஸ்ரீமதி சுபாஷினி வாசன் சர்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் இடம் பெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கே.கே.எஸ் வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

(CS/59456) JK

தகவல்:
**குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

தோற்றம்
13 . 12 . 1953



மறைவு
02 . 10 . 2024

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு கடந்த 02.10.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் திருமதி. நல்லையா தனலட்சுமி (பவளம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் இன்று 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்று அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**"ஸ்ரீசோதி வாசா"**
**பாப்பாதோட்ட வீதி**
**இணுவில் மேற்கு, இணுவில்**

**குடும்பத்தினர்**

(CS 59457) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் நினைவு ஊர்தி வவுனியா சென்றடைவு

யாழ்ப்பாணம், செப்.21
தியாகி திலீபனின் நினைவேந்தலை அனுஷ்டிக்கும் முகமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்பட்டுவரும் நினைவு ஊர்தி நேற்றுமுன்தினம் வவுனியாவைச் சென்றடைந்தது.

நேற்றுக் காலை வவுனியா மாநகரசபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத்தூபியடியில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் பொதுமக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-110)


## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Accounts | : 0777131485 |
| Group Leader | : 0704733000 |
| Waiter | : 0774078235 |
| Office boy | : 0771587186 |
| Technical Officer | : 0773580547 |
| Carpenter | : 0769158453 |
| பேக்கரி வேலை | : 0759576429 |
| Cook | : 0740695110 |
| Painter | : 0772387041 |
| Office Admin | : 0772155933 |
| Café Assistant | : 0766587149 |
| Dental Surgical Assistant | : 0777111831 |
| Sales Assistant | : 0773565155 |
| Financial Planner | : 0776530029 |
| Waiter | : 0775527937 |
| Sales Girls / Social media promoter | : 0764449377 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்ல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
076 098 4532

DEWMAS, 51, Amman Road, Nallur

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
நிர்வாகி
(CS 59450) E

077 810 6857, 075 974 2495, 021 226 5551
www.valvaieldershome.com



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234

## விற்பனைக்கு

HONDA SUPER CUB 90
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:
077 330 1116, 077 436 9204
(CS 45045) E

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
077 334 1281

## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.
077 659 2044
(CR 45066) J-1

## விற்பனைக்கு

TVS AAD முச்சக்கரவண்டி (ஓட்டோ) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 623 8129

## உடனடி வேலைவாய்ப்பு - ஹோமாகம தொழிற்சாலையில் புதிய வேலைவாய்ப்புகள்!

ஹோமாகம பகுதியில் இயங்கும் ஒரு பிரபல தொழிற்சாலையில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு!

இந்த வேலைக்கு முன் அனுபவம் தேவையில்லை.
தொழிற்சாலை சூழலில் பணிபுரிய ஆர்வமுள்ள, நம்பிக்கையுடன் மற்றும் பொறுப்புள்ள பணியாளர்களை நாங்கள் தேடுகிறோம்.

**வேலைக்கான தகுதிகள்**

- ஆண்கள் வயது: 18 முதல் 35 வரை
- பெண்கள் வயது: 18 முதல் 40 வரை
- கல்வித் தகுதி தேவையில்லை
- முன் அனுபவம் தேவையில்லை

**சலுகைகள்**

- கவர்ச்சிகரமான சம்பளம்
- OT மற்றும் பிற கூடுதல் ஊதியங்கள்
- இலவச உணவு மற்றும் விடுதி வசதி
- போக்குவரத்து மற்றும் மருத்துவ சேவைகள்

தொழிலாளர் நலன்களை கவனத்தில் கொண்டு அனைத்து அடிப்படை வசதிகளும் வழங்கப்படும். இது புதிய வேலை தேடும் நபர்களுக்கு சிறந்த வாய்ப்பு

தொடர்பு எண்கள்: 077 886 9803 / 078 691 1663
முகவரி: No 12 டெம்பிள்பர்க் இண்டஸ்ரியல்ஸ் எஸ்டேட், பனகொட, ஹோமாகம

We are currently hiring professionals for positions in production, Quality and Stores. If you are interested, please send your CV to the email address below

Email : jobvacancyap0012@gmail.com
(CS 59436) E


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 • 01 • 1965



மறைவு 02 • 10 • 2024

அமரர் சின்னமணி மகேந்திரராசா
திதி: புரட்டாதி அமாவாசை (21.09.2025)

புன்னகையே உங்கள் வதனத்தின் அழகுக் கவசம்
புரிந்துணர்வே தங்கள் இதயத்தின் உச்சம்
மென்மையாய் சிந்தித்து மெதுவாகப் பேசி
மற்றவரை மெச்சும் பண்பு உங்களது சித்தம்
என்றும் எமக்கு அன்பை அள்ளி சொரிந்த துணைவராய்
ஏற்றதொரு அப்பாவாய் அறுபதை எட்ட நின்ற வேளையிலே
நின் உயிரைக் கவர்ந்தான் அந்த கொடியோன் இயமன் எம்
நிம்மதி தொலைந்தது நினைவுகள் அழிந்தன நாசம் தான்
இதயத்தில் நிறைந்து நின்ற இனியவரே நீங்கள் இல்லா
இவ்வுலகம் எமக்குக் கசந்தது எஞ்சிய நாட்கள் எப்படியோ
உதயத்துச் சூரியனாய் எம் குடும்பத்திற்கு ஒளியூட்டியவரே
சிதறியது எங்கள் சீரான வாழ்வு சிரித்து மகிழ முடியவில்லை
சீக்கிரமாய் மீண்டு வந்து எம்மோடு சேர்ந்திடுங்கள்
பதறும் எம் மனங்களிலே பாசத்தை கொட்டுங்கள்
பரமனிடம் நாமெல்லாம் அதைத் தான் வேண்டுகின்றோம்

இராசவீதி, கோப்பாய், (CS/59453) JK குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Bike Spare Parts ஊழியர் தேவை

ஸ்ரான்லி வீதியில் இயங்கிவரும் Bike Spare Parts நிறுவனத்திற்கு வேலை ஆட்கள் தேவை. வயது 20-45 Bike Sparts தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். ஊதியம் ரூ 60,000/- முதல் (நல்ல அனுபவம் மற்றும் திறமை உள்ளவர்களுக்கு தகுந்த ஊதியம் வழங்கப்படும்.)

தொடர்பு:- 070 640 0065

## கடை குத்தகைக்கு

கஸ்தூரியார் வீதியில் கடை நீண்டகால குத்தகைக்கு உண்டு

(CS 46308) E

தொடர்புகளுக்கு:
077 751 2648 / 077 751 7019

## வேலை வாய்ப்பு

ISO தரச்சான்றிதழ் பெற்ற கட்டடநிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவை மற்றும் சான்றிதழ்களை 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**PROJECT ENGINEER**
Requirements
- B.Sc.Eng (civil)
- Two (2) years Experience in Building or Water supply.

**TECHNICAL OFFICER (ELECT)**
Requirements
- NCT-Elect/ HND - Electric or Building Services With One (1) year of Experience.


**TECHNICAL OFFICER (Civil / QS)**
Requirements
- NCT-Civil / QS, HND-Civil / QS
- Minimum Two (2) years Experience in Building.

Email :- vacancynsc@gmail.com
WhatsApp :- 0777120945

(CS 30280)A


## மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 12 . 1954



இறப்பு 19 . 09 . 2025

செட்டிக்குறிச்சி சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி லோகேஸ்வரன் மணிமலர்

அவர்கள் 19.09.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - புஸ்பரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், லோகேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், பவபிரியாவின் அன்புத் தாயாரும், கிருபானந்தன், சிவானந்தன், காலஞ்சென்ற இன்பமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜெயமணி கனகேந்திரனின் பாசமிகு மைத்துனியும், சாய்ராமின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு பொக்கணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 637 0067

(CS 46305) E


## நாகபூஷணி திருமண சேவை

அரச, தனியார், உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக, திருமணம் துரிதமாக நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணிமண்டபத்திலிருந்து 3 வீடு தள்ளிய லேனில்)

077 138 7596, 071 9999 306

(CR 45815) A

## காணி விற்பனைக்கு உண்டு

கோண்டாவில் கிழக்கில் பலாலி வீதியிலிருந்து 100m தொலைவில் திருச்செல்வம் வீதியும், பாற்பண்ணை வீதியும் சந்திக்குமிடத்தில் 12 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 038 8421

(CS/59460) J-1




## வேலைவாய்ப்பு

சமூக ஊடகம் ஒன்றில் பின்வரும் வெற்றிடங்கள் முழுநேரம் /பகுதி நேரம் உள்ளன.
அனுபவம் உள்ளவர்கள் / ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- Graphic designer
- வீடியோ படப்பிடிப்பாளர்
- செய்தி வாசிப்பாளர் / நிகழ்ச்சித் தொகுப்பாளர்
- அலுவலக வரவேற்பாளர்

உங்கள் சுயவிபரக்கோவையினை WhatsApp மூலமாக / தபாலில் 27.09.2025 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்

WhatsApp: 071 175 5665
TP: 071 175 5665 / 021 432 7088
இல. 92, 1ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(CS 59455) E

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர்மார்க்கட்டு கீழ் காணும் பணியாளர்கள் தேவை.

- Administration
- Computer Billing + Cashier
- Sales Assistant
- Packing - பொதியிடல்

Part time 5.00pm to 10.00pm
வயது எல்லை 18 - 35
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:-
077 419 5209, 077 419 5218


# மணியந்தோட்டத்தில் பெருமளவு போதைமாத்திரைகள் மீட்பு

## பிரதான சந்தேகநபர் தலைமறைவு பிறிதொருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, நேற்று 700 இற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள நிலையில், பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார்.

மணியந்தோட்டத்தில் சந்தேகத்துக்கு இடமான வகையில் நடமாடிய நபரொருவர், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதன்போது, அவரிடம் இருந்து 20 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையின்போது, விற்பனை செய்வதற்காகவே போதைப்பொருள்களை உடமையில் வைத்திருந்தார் என்பதும், மணியந்தோட்டத்தைச் சேர்ந்த பிறிதொருவர் அந்தப் போதை மாத்திரைகளை அவருக்கு வழங்கியதும் தெரியவந்தது.

இதையடுத்து, பிரதான சந்தேகநபரின் வீட்டை பொலிஸார் சோதனையிட்ட போது 700இற்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் தலைமறைவாகிய நிலையில், அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ம-26)



# கண்டல் தாவரம் நடுகை

யாழ்ப்பாணம், செப். 21

வேலணைப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மண்டைதீவுச் சந்திக்கு அருகிலுள்ள கடலேரியில் 300 கண்டற் தாவர மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் நடப்பட்டன.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் கரையோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கையாக 500 கண்டற் தாவரங்களை நடும் வேலைத்திட்டத்தில் முதற்கட்டமாக மேற்படி 300 கண்டற் தாவர நாற்றுகள் நடப்பட்டன. (ச-9)


## பணிப் பெண் தேவை

நன்கு சமைக்க தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
இடம்-யாழ்ப்பாணம்-கச்சேரி

தொடர்பு: 077 153 2398, 077 072 5056


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UDUVIL GIRLS' COLLEGE

### VACANCY-NURSERY TEACHER

Uduvil Girls' College invites applications from qualified and experienced candidates for the post of Nursery Teacher.

**Requirements:-**

- Diploma/Certificate in Early Childhood Education or equivalent qualification
- Fluency in English and Tamil
- Previous experience in teaching young children will be an advantage
- Caring, patient, and creative personality with good communication skills

**Responsibilities:-**

- Conducting nursery-level classes in a child-friendly and engaging manner
- Preparing and delivering age-appropriate learning activities
- Ensuring the safety and well-being of children under care
- Supporting the overall development of young learners

**An attractive remuneration package will be offered to the selected candidate.**

Please send your application with contact details of two non-related referees to: **The Principal, Uduvil Girls' College, Uduvil, Chunnakam.**
Applications should reach us on or **before Friday, 26th September 2025.**
Only short-listed candidates will be notified.

**Ms.R.M.Kulendran**
**Principal**

(CR/46093) JK

## UDUVIL GIRLS' COLLEGE

### VACANCY-FINANCE ASSISTANT

Uduvil Girls' College invites applications from suitably qualified candidates for the post of Finance Assistant.

**Requirements:**

- University degree in a relevant subject
- AAT or equivalent professional qualification
- Minimum of 2 years' experience in accounting / finance
- Proficiency in QuickBooks (mandatory) and MS Office
- Strong attention to detail and organizational skills
- Ability to work independently and meet deadlines

**Responsibilities:**

- Handling day-to-day financial transactions
- Preparing reports and maintaining records
- Assisting in audits and budget preparation

**An attractive remuneration package will be offered to the selected candidate.**

Please send your application with contact details of two non-related referees to: **The Principal, Uduvil Girls' College, Uduvil, Chunnakam.**

Applications should reach us **on or before Friday, 26th September 2025.**

Only short-listed candidates will be notified.

**Ms.R.M.kulendran**
**Principal**

(CR 46098) E

## காணி விற்பனைக்கு

A9 வீதி, இயக்கச்சி சந்தியில் இருந்து 3 நிமிடத்தில் அடையலாம்.

- மின்சார வசதிகள் உண்டு
- காணிக்கு செல்லும் வரை கார்ப்பெட் வீதி

96 பரப்பு (தேவைக்கேற்ப பரப்புக்கள் பிரித்து வழங்கப்படும்)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 484 8614**
**076 604 0203**


NIPPON®
The Original
பயன்படுத்தப்பட்ட பொருட்கள் இல்லை, ஒரிஜினல் A தரமுள்ள பொருட்களை பயன்படுத்தி செய்யப்பட்டது.
தர நிர்ணய சபையினால் அங்கீகரிக்கப்பட்டு நேரடியாக தொழிற்சாலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது.



- காற்றின் வேகம் 10ft-12ft
- கொப்பர் மோட்டர்
- 5 பிளேட்கள்
- கிறில்/பிளேட் 400 mm
- கடினமான அடித்தளத்துடன் உறுதியானது

நிப்போன் மின்விசிறியின் காற்று வேகத்தை மற்ற விசிறிகளுடன் ஒப்பிட்டு பார்க்க..

போலிகளில் அவதானமாயிருங்கள்..!

லங்கா நிப்போன்

20, Keyzer Street, Colombo 11. 011 2437735 / 011 2437736
info@lankanippon.com | www.lankanippon.com


## விசேட அறிவித்தல்



இது சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் உடன் வணிக உறவுகளைக் கொண்ட அனைத்து நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கவனத்திற்கு

எங்கள் நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளராகப் பணிபுரிந்து வந்த, இல.499ஃ1இ அரசடி அம்மன், கோவில் வீதி, பாண்டிரிப்பு-2ம், கல்முனையில் வசிக்கும் கே.விஸ்வநாதன் (தேசிய அடையாள இல. 692730313V), என்பவர் 2025 ஒகஸ்ட் மாதம் 04, ஆம் திகதி முதல் எங்கள் நிறுவனத்தில் பணியில் இல்லை என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் இதற்கு பிறகு சிலோன் கிரீன் லைஃப் பிளான்டேஷன் (பிரைவேட்) லிமிடெட் சார்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிவர்த்தனைக்கும் எங்கள் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதனை இதன் மூலம் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1967 ம் ஆண்டு பிறந்த மாத வருமானம், சொந்த வீடு உள்ளவர்க்கு வாழ்க்கைத்துணை தேவை

(CS 56427) E

தொடர்புகளுக்கு:
**076 821 6537**

## மஹாளய பட்சத் திதி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப். 21


வரலாற்றுச் சிறப்பு மிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் மஹாளய பட்சத் திதி இறுதிநாளை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், நண்பகல் 12 மணிக்கும் சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளது. (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுமை மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 'ஓராயம்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பாலாவித் தீர்த்தக்கரைப் பகுதியில் மரநடுகை நிகழ்வு நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. ஓராயம் நிறுவனத்தின் தலைவர் மோசஸ் மரியதாசன் தலைமையில் திருக்கேதீஸ்வரம் ஆலய அறங்காவலர்கள், ஓராயம் நிதியம் மற்றும் மன்னார் வனவளத் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டுமுயற்சியில் குறித்த மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-56)





## ஸ்கந்தபுரம் பொதுநூலகம் புனருத்தாரண திறப்புவிழா

கரைச்சிப் பிரதேசசபையின் ஸ்கந்தபுரம் பொதுநூலகம், புனரமைப்புப் பணிகளின் பின்பு நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த. முகுந்தன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர்களான சி. சுப்பையா, சு. தயாபரன், ஸ்கந்தபுரம் அ.த.க. பாடசாலை அதிபர் ச. தவசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,113)

### மூன்று...

இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 18, 22 மற்றும் 24 வயதுடைய மூன்று இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 180 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### தலைவனை...

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தமிழகம் நாகை மாவட்டத்தில் விஜய் நேற்றுத் தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தார். இதன்போதே, தமிழக வெற்றிக் கழகம் ஈழத் தமிழர்களுக்காகத் துணை நிற்கும். அது தனது பிரதான மான கடமை என்று கூறியுள்ளார்.

"மீன்பிடி நடவடிக்கையின்போது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தமிழக மீனவர்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டியது அவசியம். அதேநேரம் தமிழக மீனவர்களின் உயிர்கள் எந்தளவுக்கு முக்கியமோ, அதே அளவுக்கு தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களின் வாழ்க்கையையும், கனவுகளையும்நாம் முன்னிலைப்படுத்தவேண்டும்" என்றும் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் அரங்கில் அண்மைக் காலமாக ஈழத்தமிழர்கள் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுவருகின்றது. இந்த நிலையில் விஜயின் உரை, ஈழத்தமிழர் விவகாரத்தை மேலும் கூர்மைப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### கட்டுமானப்...

நிலையிலேயே, இந்த வெடிபொருள்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், மேலதிக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வெடிபொருள்களை மீட்பதற்கான நீதிமன்ற அனுமதி இன்று பெறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### அரச...

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் பிமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'பேருந்து நிலையங்களில் அதிக உழைப்பை வழங்குவோருக்கு அதிக ஊதிய உயர்வு வழங்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று அமைச்சர் பிமல் மேலும் கூறியுள்ளார். (அ-ம)

### வயலில்...

கந்தையா விஸ்வலிங்கம் (வயது-53) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மாரடைப்பு ஏற்பட்டு ஏற்கனவே சிகிச்சை பெற்ற நிலையிலேயே, அந்த நபர் வயலில் வேலை செய்தபோது திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவர் உடனடியாக மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அந்த நபர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-ம-28)

### தலைமறைவாக...

கனகராயன்குளம் பகுதியில் பெண்ணொருவர் உயிரிழப்பதற்குக் காரணமான விபத்தை ஏற்படுத்திவிட்டு தலைமறைவாக இருந்த சந்தேகநபர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விபத்துடன் தொடர்புடைய வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்த ம. இதயரஞ்சினி (வயது -32) என்ற குடும்பப்பெண் கடந்த 16ஆம் திகதி இரவு முறைப்பாடொன்றை வழங்குவதற்காக பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். இதன்போது, ஏ-9 வீதியில் வைத்து அவரை வாகனமொன்று மோதியதில் படுகாயமடைந்து உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தது. சந்தேக நபர்கள் தொடர்ந்து தலைமறைவாக இருந்த நிலையில், வவுனியா மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலையில், விசுவமடுப் பகுதியில் வைத்து சந்தேக நபர்கள் இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

வாகனத்தின் சாரதியும், உரிமையாளருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் நிறம் உட்பட ஏனைய அமைப்புகளை மாற்றியமைக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டபோதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-110)

### எந்தவொரு...

முன்னாள் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டுவிழா நேற்றுக் கொண்டாடப்பட்டது. விழாவில் ரணில் உரையாற்றினார். ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் பொதுவெளியில் ரணில் ஆற்றுகின்ற முதலாவது உரை என்பதால், இந்த உரை மீது நாடளாவிய ரீதியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது.

இதன்போது ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற்கு ஒரு பிரதானமான காரணம் இருந்தது. அதுதான் எனது கைது. லண்டனுக்கான எனது பயணம் முழுக்க முழுக்க சட்டபூர்வமானது. அதில் மோசடிகள் என்று எவையும் இல்லை. இவை அனைத்தும் அதிகாரபூர்வ பயணம். முற்றிலும் அதிகாரபூர்வ பயணம். அந்த நேரத்தில் நான் லண்டனில் இருந்ததால், அங்கிருந்து எனக்குக் கிடைத்த அதிகாரபூர்வ அழைப்பை (பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு) ஏற்றுக் கொண்டேன். விழாவுக்கு நான் அழைக்கப்படாவிட்டாலும் நான் அங்கு இருந்திருப்பேன். மீதமுள்ள உண்மைகளை நான் சொல்லமாட்டேன். எனது வழக்கறிஞர்கள் இப்போது அதைப்பற்றி பேச வேண்டாம் என்று என்னிடம் கூறியுள்ளனர். நீதிமன்றத்தில் பேசலாம்.

நான் கைதுசெய்யப்பட்ட தருணத்தில் அனைவரும் ஒன்றுகூடினார்கள். நண்பர்கள் மட்டுமல்ல, என்னிடம் இருந்து பிரிந்து சென்றவர்கள், எனது அரசியல் எதிரிகள் என அனைவரும் ஒன்றுகூடினார்கள். இதை மிகச் சிறந்த ஜனநாயகப்பண்பாக நான் எடுத்துக்கொண்டேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் என்னைச் சந்திக்க வந்தனர். அந்த நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடல் நிலை சரியில்லாமல் இருந்தார், அவர் எனக்கு ஒரு செய்தியை அனுப்பினார், முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச எனக்கு ஒரு செய்தியை அனுப்பினார். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பலமுறை சந்தித்தார். நாங்கள் இப்போது ஒன்றாக உள்ளோம்.

78 ஆண்டுகளாக நாம் என்ன செய்தோம் என்று அவர்கள் கேட்கிறார்கள். சொல்லத் தேவையில்லை, கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தியுள்ளோம். இன்று மின்சாரம் இல்லாத வீடுகளே இல்லை. செங்கற்களால் ஆன சுவர்களைக் கொண்ட குடிசை வீடுகளே இல்லை. அனைவரும் சம்பாதிக்கக்கூடிய வகையில் திறந்த பொருளாதாரத்தை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். பல உதாரணங்கள் உள்ளன. அரசியலை உயர் வகுப்பினருக்காக மட்டுப்படுத்தவில்லை. அதனால்தான், ஜனாதிபதி இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அத்தகைய அரசியலமைப்பை உருவாக்கியது யார்? பல கட்சி முறையைப் பாதுகாக்க விரும்பினால், நாம் அனைவரும் ஒன்றுசேர வேண்டும் - என்றார். (அ-ம)

### ஆவணக்...

தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, திலீபனின் வரலாற்றை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் விதமாக நல்லூரில் நேற்று மாலை ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

'பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!' எனும் தொனிப்பொருளில் திறந்து வைக்கப்பட்ட இந்த ஆவணக் காட்சியகத்தின் ஒரு பகுதியாகவே சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசின் எதேச்சதிகாரப்போக்கு; முறியடிக்க அணிதிரள்வோம்!

*தலதா அத்துகோரள அழைப்பு*

கொழும்பு, செப். 21

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதேச்சதிகார வழியில் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இதனைத் தோற்கடிப்பதற்கு அனைத்து அரசியற் கட்சிகளும் அணி திரள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தலதா அத்துகோரள அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழா கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், மொட்டுக்கட்சி உட்பட எதிரணிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது சட்டப்பூர்வமாக உள்ள எதேச்சதிகாரம் தோற்கடிக்கப்பட வேண்டும். 76 வருடகால சாபம் பற்றி கதைத்தும், வைராக்கியத்தை விதைத்துமே ஆட்சிப்பீடமேறினர். 76 வருடகாலம் இந்த நாட்டுக்காக சேவையாற்றிய அனைத்துக் கட்சிகளையும் பழிவாங்கும் நோக்கிலேயே அரசு செயற்படுகின்றது. எனவே, இந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக நாம் அனைவரும் அணி திரளவேண்டும். ஒருமித்த கருத்துடன் இந்தச் சவாலை நாம் எதிர்கொள்வோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-44)

## மணமகன் தேவை

இந்து உயர் குருகுலம் 1996 இல் பிறந்த அவிட்டம் 3ம் பாதம் செவ்வாய் குற்றமற்ற கொழும்பு அரச வங்கி ஒன்றில் உதவி முகாமையாளராக (IT) பதவி வகிக்கும் அழகிய 164 cm உயரமுள்ள மணமகளுக்கு, தகுந்த மணமகனை உள்நாட்டில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தரகர் தேவையில்லை.
உரியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 048 3005

## ஆலய குருக்கள் (அர்ச்சகர்) தேவை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி கடை வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்திற்கு அனுபவம் வாய்ந்த சமய கலாச்சாரமுள்ள அர்ச்சகர் உடன் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
077 612 6023, 077 069 2133

(CS/59422) J-1

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ் இராமநாதன் வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் 1 1/4 பரப்பு சுற்று மதில் காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்

தொடர்பு: 077 723 5740

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள
வர்த்தக நிலையத்திற்கு
(Computer Billing)
செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புவர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்.

தகைமைகள் :
அடிப்படை கணினி அறிவு அவசியம்.
வயதெல்லை : 20 - 30 வயதுவரை

தொடர்புகளுக்கு:-
070 401 6775

(CS/59352) J-1

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண் / பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 456 9678

## வேலையாட்கள் தேவை

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றிற்கு பொதியிடுதல் வேலைக்கு ஆட்கள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
(20 -35 வரை)
சம்பளம்: 35000/=

தொடர்பு: 076 096 9728

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் (பெண்) தேவை
8 மணி முதல் 12 வரை - 1000
8மணி முதல் 4 மணி வரை - 1500
வயதெல்லை 25 - 50 அருகில் உள்ளோர் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 789 8862

## மணமகள் தேவை

உடுவில் இந்து (V) 1995 இல் பிறந்த 8 இல் செவ்வாய் ஆயிலிய நட்சத்திரம், கிரகபாவம் 33, Phoneshop நடாத்தும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:- 077 757 1455

(CS/59437) JK

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன், யாழ் மாநகர சபை முன் வீதி.
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்.
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m.
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m.

இரண்டு பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
ஒருபரப்பின் விலை - 30 000 000 (மூன்று கோடி)
நல்ல சுற்றுச் சூழல்.
அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளது.

தொடர்புக்கு - 077 468 3354, 077 288 0152
076 860 2770
Golden Real Estate (Pvt)Ltd

## காணி விற்பனைக்கு உண்டு

நாவற்குழி அமிர்தா வீதியில் இருபக்க பாதைகளை உடைய 16 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 711 2349
076 945 6929
Whatsapp:- 077 846 6182

(CR/46081) JK

## அவசர தேவை

சிறுநீரகம் பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு அவசரமாக O வகையான சிறுநீரகம் தேவைப்படுகின்றது.
வயதெல்லை 30 - 50

தொடர்பு: 076 476 7400

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 14 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:- விமல்
076 755 8606, 074 338 4481, 077 638 5683

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 21.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 புரட்டாதி 5 ஞாயிற்றுக்கிழமை (21.09.2025) சிகரம் :157

அன்புமகன் கண்டானே ஆறுபவுண் சங்கிலியை
நன்றுக கத்தினானே சாவீட்டில் – அன்பப்பா
சங்கிலியும் அப்பாவின் தொண்டையுமோ போனதுவே
தங்கமகன் செய்தான் கடன்.

பொன்.சுகந்தன்



# 16 ஆண்டு கால ஐ.நா. மையத் தமிழ் அரசியல்?

○ நிலாந்தன்

எரித்திரியா, ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள ஒரு நாடு.எத்தியோப்பியாவிலிருந்து விடுதலை பெறுவதற்காக ஆயுதம் ஏந்திப் போராடிய ஒரு நாடு. 1980களில் ஈழ விடுதலை இயக்கங்கள் மத்தியில் எரித்திரியா ஒரு பிரகாசமான ஆபிரிக்க முன்னுதாரணமாகப் பார்க்கப்பட்டது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தியோக பூர்வ பத்திரிகையில் எரித்திரியா பற்றி ஆழமான ஒரு கட்டுரை வெளிவந்தது.1990களில் எரித்திரியா ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு மறைமுகமாக உதவி செய்தது என்ற ஊர்ஜிதமற்ற தகவல்கள் வெளிவந்தன.

இவையெல்லாம் பழைய கதைகள்.புதிய கதை என்னவென்றால் இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் அறுபதாவது ஜெனிவாக் கூட்டத்தொடரில், எரித்திரியா தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தோடு உணர்வுத் தோழமையை வெளிப்படுத்தியுள்ளது என்பதுதான். எரித்திரியா மட்டுமல்ல விடுதலைக்காகப் போராடிய வியட்நாம், கியூபா,தென் சூடான் போன்ற நாடுகளும் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்தோடுதான் நிற்கின்றன.

அவை மட்டுமல்ல,எந்த எத்தியோப்பியாவிடமிருந்து விடுதலை பெறுவதற்காக எரித்திரியா போராடியதோ அந்த எத்தியோப்பியாவும் அரசாங்கத்தோடுதான் நிற்கின்றது.

இந்த நாடுகள் மட்டுமல்ல இப்பொழுதும் இன அழிப்புக்கு உள்ளாகும் பலஸ்தீனம் யாரோடு நிற்கின்றது? காஸாவில் நடக்கும் இனஅழிப்புக்கு எதிராக தமிழ் மக்கள் பலஸ்தீனர்களின் பக்கம்தான். ஆனால் 2009க்குப் பின் பலஸ்தீன் அதிகார சபை மஹிந்த ராஜபக்சவை அங்கே ஒரு விருந்தினராக அழைத்து நாட்டின் உயர் விருதை அவருக்கு வழங்கியது. அதுமட்டுமல்ல அவருடைய பெயரில் ஒரு வீதியையும் திறந்து வைத்தது.

போராடும் நாடுகளும் போராடி வெற்றிபெற்ற நாடுகளும் விடுதலைக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் அறம். ஆனால் இந்த நாடுகள் ஜெனிவாவில் யாரோடு நிற்கின்றன? ஏன் அப்படி நிற்கின்றன?

**ஏனென்றால் அது அரசுக்கும் அரசுக்கும் இடையிலான கட்டமைப்புசார் உறவு. அந்த உறவில் அறம்,நீதி,நியாயம் போன்றவை கிடையாது. ஐ.நா. என்பது முதலாவதாக அரசுகளின் அரங்கம். அங்கு அரசுகளின் நலன்களை முதன்மைப்படுத்தித்தான் முடிவுகள் எடுக்கப்படும். அரசுகள் எப்பொழுதும் தமது இராணுவ பொருளாதார அரசியல் நலன்களின் அடிப்படையில் தான் முடிவுகளை எடுக்கின்றன. நீதிநெறிகள் அறநெறிகளின் அடிப்படையில் அல்ல. நீதிநெறிகளும் அறநெறிக் கதைகளும் எமது பாலர் பாடசாலைப் புத்தகங்களில்தான் உள்ளன. ஐ.நா.வில் இல்லை.**

கடந்த 16 ஆண்டுகளாக ஜெனிவாவில் அரசுகள் எடுக்கும் முடிவுகளையும் அந்த அரசுகளின் அரங்கில் வெளியிடப்படும் உத்தியோகபூர்வ அறிக்கைகளையும் அங்கு நிறைவேற்றப்படும் தீர்மானங்களையும் தொகுத்துப்பார்த்தால் அது தெளிவாகத் தெரியும்.கடந்த 16 ஆண்டுகளாக ஜெனிவாவில் இந்தியா திரும்பத் திரும்ப 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்த வேண்டும் என்பதைத்தான் ஒரு தீர்வாக முன்வைத்து வருகிறது. இம்முறையும் கடந்த எட்டாம் திகதி இந்தியாவின் ஐ.நா.வுக்கான பிரதிநிதி பேசும்போது இலங்கையின் யாப்பை முழுமையாக நிறைவேற்றவேண்டும், அதாவது 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்தவேண்டும் என்பதைத்தான் வலியுறுத்திப் பேசினார். இந்தியா இதை இப்பொழுதுதான் சொல்கிறது என்பதல்ல. கடந்த 16 ஆண்டுகளாகச் சொல்லிவருகிறது.

இந்தியா மட்டுமல்ல ஐ.நா.வின் உத்தியோகபூர்வ அறிக்கைகளிலும் 13ஆவது திருத்தம் பற்றிக் கூறப்படுகிறது.கடந்த ஒன்பதாம் திகதி வெளியிடப்பட்ட ஐ.நா.வின் உத்தேசத் தீர்மான வரைவிலும் அது உண்டு.அதுமட்டுமல்ல கடந்த 16 ஆண்டுகளாக ஐ.நா. மற்றொரு விடயத்தை திரும்பத்திரும்ப கூறிவருகிறது. அது என்னவென்றால்,பொறுப்புக்கூறல் என்ற விடயத்தில் இலங்கை அரச படைகள் மட்டுமல்ல விடுதலைப்புலிகளும் பொறுப்புக்கூறவேண்டும் என்பதுதான். இதுவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அறிக்கையில் உண்டு. உத்தேசத் தீர்மான வரைவிலும் உண்டு. எனவே கடந்த 16 ஆண்டுகளாக ஐ.நா.வில் மாறாத விடயங்கள் சில உள்ளன. அவற்றை மாற்ற ஏன் தமிழ் மக்களால் முடியவில்லை? ஏனென்றால் தமிழ் மக்கள் ஓர் அரசில்லாத தரப்பு. ஏதாவது ஓர் அரசுக்கூடாகத்தான் தங்களுடைய நிலைப்பாட்டை அங்கே வலியுறுத்தலாம். போராடலாம். நிகழும் ஐ.நா. கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வாசித்த அறிக்கை தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டக்கூடியதாக இல்லை. ஆனால் அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைத் திட்டிக்கொண்டிருக்கவும் முடியாது. ஏனென்றால் முதலாவதாகவும் கடைசியாகவும் அவர் ஒரு ராஜதந்திரி. அவரை மனித உரிமைகளின் காவல் தெய்வம் அல்ல. அவர் ஒரு தேவதையும் அல்லர். ராஜதந்திரிகள் எப்பொழுதும் இராஜதந்திரமாகத்தான் பேசுவார்கள்;அறிக்கை விடுவார்கள். எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்கள் ஐ.நா.வில் தமக்குள்ள வரையறைகளை விளங்கிக்கொள்ளவேண்டும்.

**கடந்த 16ஆண்டுகளாக நீதிக்கான தமிழ்மக்களின் போராட்டத்தை நிர்ணயிக்கக்கூடிய விடயங்களில் ஐ.நா.வில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.**

**அதிலும் முக்கியமாக ஐ.நா.மைய தமிழ் அரசியலில் தமிழ்மக்கள் தொகுத்துப் பார்க்கவேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. வரையறுக்கப்பட்ட ஆணையைக்கொண்ட மனித உரிமைகள் பேரவையில்தான் இலங்கைக்கான பொறுப்புக் கூறல் கையாளப்பட்டு வருகிறது. மனித உரிமைகள் பேரவையானது தனது தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரு நாட்டின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கவோ அல்லது தடைகளை விதிக்கவோமுடியாது.** மாறாக,குறிப்பிட்ட நாடு ஏற்றுக்கொண்டால், ஐ.நா.வில் அந்த நாட்டின் இணை அனுசரணையோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம். இல்லையென்றால் அந்த நாட்டுக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றலாமே தவிர அந்த நாட்டுக்கு எதிராக துலக்கமான விதங்களில் நடவடிக்கைகளை எடுக்க முடியாது. எனவே இலங்கை இனப்பிரச்சினை மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது என்பதனை தமிழ்மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். அதனை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டுபோக உலக சமூகம் விரும்பவில்லை என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். அது ஓர் அரசியல் தீர்மானம். தமிழ் மக்களின் விவகாரத்தை எந்த அவைக்குள் வைத்திருப்பது என்பது. அதனால்தான் கடந்த 2021ஆம் ஆண்டு தமிழ்க்கட்சிகள் கூட்டாகக் கடிதம் எழுதிய பின்னரும் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு உள்ளேயே அமைக்கப்பட்டது.

கடந்த 16 ஆண்டுகால ஐ.நா. மையத் தமிழ் அரசியலில் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்தின் பிரகாரம் நிலை மாறுகால நீதியை நாட்டில் முன்னெடுப்பதற்கு ஐ.நா. முயற்சித்தது. அப்போது இருந்த இலங்கை அரசாங்கமும் அதற்கு இணை அனுசரணை வழங்கியது. ஆனால் 2021இல் நிலைமாறுகால நீதியின் தமிழ்ப் பங்காளியாகிய சுமந்திரனே சொன்னார் அது "தோல்வியடைந்த பரிசோதனை" என்று.

அதன்பின் 2021ஆம் ஆண்டுத் தீர்மா னத்தின் பிரகாரம் சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஐ.நா.வில் இயங்குகிறது. கவனிக்கவும், அந்த அலுவலகம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய அலுவலகத்துக்குள்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதாவது அந்த சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான வழிமுறையும்கூட வரையறுக்கப்பட்ட ஆணையைக்கொண்ட மனித உரிமைகள் ஆணையகத்துக்குள்தான் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஏனெனில் அது ஓர் அரசியல் தீர்மானம்.

அந்த அலுவலகத்தை ஓர் அடைவாகச் சுட்டிக்காட்டும் தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களும் உள்ளனர். அந்த அலுவலகத்தில் திரட்டப்பட்ட சான்றுகள் சாட்சிகளின் அடிப்படையில்தான் இலங்கை அரச படைகளின் பிரதானிகள் சிலருக்கு எதிராகவும் ராஜபக்சக்களுக்கு எதிராகவும் கனடா,அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தடைகளை விதித்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால் இந்தத் தடைகள் யாவும் போரை நடத்திய சில தளபதிகளுக்கும் ராஜபக்சக்களுக்கும் எதிராகத்தான். இலங்கை அரசுக் கட்டமைப்புக்கு எதிராக அல்ல.

**மேலும் அந்த அலுவலகத்தில் சேகரிக்கப்படும் சான்றுகள் எவ்வாறு அனைத்துலக நீதிமன்றங்களை நோக்கி நீதி விசாரணைக்குரிய பொருத்தமான ஆவணங்களாக முன்னகர்த்தப்படும் என்பதில் தனக்கு சந்தேகங்கள் உள்ளன என்று கஜேந்திரகுமார் தெரிவித்தார். இந்த விடயத்தில் தன்னுடைய தனிப்பட்ட சாட்சியமே எவ்வாறு கையாளப்பட்டது என்ற உதாரணத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். ஐ.நா.வுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுதுவதற்காக ரில்கோ ஹோட்டலில் நடந்த சந்திப்பில் வைத்து அவர் அதைச் சொன்னார்.**

எனவே இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். கடந்த 16ஆண்டுகால ஐ.நா.மைய தமிழ் அரசியலானது வரையறுக்கப்பட்ட ஆணையைக்கொண்ட மனித உரிமைகள் பேரவைக்குள் பெட்டி கட்டப்பட்டிருக்கிறது. அது ஓர் அரசியல் தீர்மானம். எனினும் அந்த அலுவலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நாட்டுக்குள் வருவதற்கு இன்றுவரை இலங்கை விசா வழங்கவில்லை. கடந்த 16ஆண்டுகளாக இந்தியா திரும்பத்திரும்ப '13தான் தீர்வு' என்று கூறுகிறது. ஐ.நா. திரும்பத்திரும்ப போரில் ஈடுபட்ட இரண்டு தரப்புகளும் பொறுப்புக் கூறவேண்டும் என்று கூறுகிறது. ஆனால் தொடர்ச்சியாகவந்த எந்தவொரு இலங்கை அரசாங்கமும் திட்டவட்டமான விதங்களில் பொறுப்புக்கூறவில்லை. "16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மீறல்களுக்காக இலங்கை இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இன்று காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்கள், பிரயோகிக்கப்படும் உத்திகளுக்கு இதுவே முன்னுதாரணம்" என்று அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா. இலங்கை அரசுக் கட்டமைப்பைத் தண்டிக்கவில்லை என்பதைவிடவும் தண்டிக்க விரும்பவில்லை என்பதுதான் சரி. ஏனென்றால் அது ஓர் அரசியல் தீர்மானம். அந்த அரசியல் தீர்மானத்தை மாற்றுவதென்றால் தமிழ் மக்களும் அதற்குரிய இராஜதந்திர செயற்பாடுகளில் இறங்கவேண்டும். ஓர் அரசைப் போல சிந்தித்துச் செயற்படவேண்டும். கடந்த 16 ஆண்டு கால ஐ.நா. மைய அரசியலில் இருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் அது.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவிட்ஸர்லாந்து கருத்தரங்கில் நடந்தது என்ன?

## மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் தயாரிக்கப்பட்ட 'ஏக்கிய இராஜ்ஜிய 'என்ற அரசியல் யாப்பை மீளப்புதுப்பிக் ஏற்பாடு

அ.நிக்ஸன்

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குரிய தீர்வை வழங்கும் ஆணையைப் பெற்றுள்ளதாக ஜே.வி.பி. எனப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், சுவிட்ஸர்லாந்தில் இடம்பெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் பெருமையுடன்வலியுறுத்திக்கூறியுள்ளது. ஆனால் இந்தக் கருத்தை மறுத்துரைத்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முழுமையான சமஷ்டி ஆட்சிமுறைமை ஒன்றையே தமிழர்கள் எதிர்பார்ப்பதாகவும், ஈழத்தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசியக் கட்சிகளே பெற்றிருப்பதாகவும் காரசாரமாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தை தமிழர் தரப்புக் கையாள வேண்டுமே தவிர சிங்கள கட்சிகள் அல்ல என்ற கடும் தொனியையும் அவர் வெளிப்படுத்தினார். சுவிட்ஸர்லாந்து அரசின் கீழ் இயங்கும் அரசார்பற்ற நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த மூன்று நாள் அரசியல் கருத்தரங்கில், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களும் மற்றும் சுவிட்ஸர்லாந்தில் உள்ள தமிழ் இளையோர் அமைப்பினரும் பங்குபற்றியிருந்தனர்.

சுவிட்ஸர்லாந்தில் நடைமுறையில் உள்ள சமஷ்டிமுறை கொண்ட அரசியல் யாப்பு மற்றும் சுவிட்ஸர்லாந்தில் அரசியல் நிர்வாக அமைப்பியல் முறைமைகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. சுவிட்ஸர்லாந்து வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் சுவிட்ஸர்லாந்தின் முக்கியமான இராஜதந்திரிகள் இந்தக் கருத்தரங்கில் பங்குகொண்டு விளக்கமளித்தனர்.

சிங்கள , தமிழ்ப் பிரதிநிதிகளின் நியாயமான நீண்ட விளக்கங்களை செவிமடுத்ததாக இந்தக் கட்டுரையாளருக்கு ஏற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். தமிழர்கள் சமஷ்டி முறையிலான ஆட்சியை விரும்புவதாகவும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதை எவரும் எதிர்க்கவில்லை எனவும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார். சுவிட்ஸர்லாந்து அரசியல் நிர்வாக முறைமை பற்றிய விளக்கங்களின் பின்னணியில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே உடனடித் தீர்வு என்று வலியுறுத்திய சுரேஷ் பிரேமச்சந்திரன், அதற்கு மேலான அதிகாரமுறைகள் பற்றி ஆலோசிக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்தார்.

ஆயினும், கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழர் தரப்பினரில் அதிகமானோர், இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையை விரும்பவில்லை என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தினர். குறிப்பாக சுவிட்ஸர்லாந்து தமிழ் இளையோர் அமைப்பினர் இலங்கையின் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு முறைக்கு எதிரான விளக்கங்களை முன்வைத்தனர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழத்தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றை விவரமாக எடுத்துக்கூறியதை முழுமையாக ஏற்றுக்கொண்ட சுவிட்ஸர்லாந்தின் இளையோர் அமைப்பினர், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு 'இரு அரசு' முறையிலான தீர்வு பொருத்தமானது என்ற கருத்தை முன்வைத்ததோடு, கடந்தகால ஆட்சியாளர்களினாலும் இலங்கை இராணுவத்தினராலும் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறியிருந்தனர்.

ஈழத்தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றுப் பட்டறிவுகள் மூலமாக இரு அரசு தீர்வுதான் பொருத்தமானது என்ற கருத்தில், இளையோர் அமைப்பினர் வலியுறுத்தினர். இந்தக் கருத்துக்கு மாற்றுக் கருத்தை வெளிப்படுத்திய தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைத் தாம் பெற்றுள்ளதாகவும், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் ஐந்து உறுப்பினர்களையும் வடக்கு கிழக்கில் மொத்தமாக எட்டு உறுப்பினர்களைப் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் பற்றியும் அவர்கள் எடுத்துக்கூறினர். புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் தமிழர்கள்உள்ளிட்ட அனைத்துமக்களின்பிரச்சினைகளுக்கும் பொருத்தமான தீர்வு பரிந்துரைக்கப்படும் எனவும் அவர்கள் தமது தரப்பு வாதங்களை முன்வைத்தனர். ஆனால் அநுர அரசாங்கம் முன்வைக்கவுள்ள புதிய அரசியலமைப்புத் தொடர்பாக கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழ்த் தரப்பு உறுப்பினர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை. அந்த புதிய யாப்பு தொடர்பாக சரியான புரிதல் அற்ற தன்மை காணப்படுவதாக கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டினார்.

மைத்திரி- ரணில் அரசாங்கத்தின்போது புதிய அரசியல் யாப்புக்காக அனைத்துக் கட்சிகளானாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஆய்வுசெய்து அதன் அடிப்படையில் புதிய அரசியல் யாப்புக்கான வேலைத்திட்டங்களைத் தொடரவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் நிஹால் அபயசிங்க அங்கு விளக்கமளித்தார். மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் நாடாளுமன்றம், அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டு ஆறு உப குழுக்களாக ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தலைப்பில் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இலங்கையின் இறைமை தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக பரிந்துரைகள் முன்மொழியப்பட்டு அவை அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஆகவே அந்த விடயங்களைத் தொடர்ச்சியாக தமது அரசாங்கமும் ஆராய்ந்து, அதனை நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் மேலும் சில அதிகார முறைகளை உள்ளடக்கி புதிய யாப்பைச் சமர்ப்பிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளதாகவும் நிஹால் அபயசிங்க அங்கு விளக்கமளித்திருந்தார்.

ஆனால் இந்த விளக்கம் தொடர்பாக பரிசீலித்த தமிழ்த் தரப்பினர் குறிப்பாக கஜேந்திரகுமார், தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பங்கள் புதிய யாப்பில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர். அதேநேரம் வடக்கு- கிழக்கில், பௌத்த மயமாக்கல் மற்றும் இராணுவச் செயற்பாடுகள் பற்றி கஜேந்திரகுமார் நீண்ட விளக்கமளித்தார். "தற்போது நடைமுறையில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. ஆனால் அதற்கு தமிழ்த்தரப்பின் ஒத்துழைப்பு அவசியம் எனக் கோருவது மிகவும் தவறான அரசியல் கற்பிதம்" என்ற தொனியில் கஜேந்திரகுமார், தனது கருத்தை அழுத்தம் திருத்தமாக முன்வைத்தார்.

பான விடயங்களை அதிகாரபூர்வமாக அறிக்கையிடவேண்டும்" எனக் கேட்டபோது, சுவிட்ஸர்லாந்து இராஜதந்திரிகள் தாம் அதனை விரும்பவில்லை என நிராகரித்து விட்டனர். இருந்தாலும், இந்தக் கருத்தரங்கில் பேசப்பட்ட விடயங்களை அதிகாரபூர்வமாக அறிக்கையிடுவது பற்றி சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்திடம் கோரவுள்ளதாகவும் அந்த ஏற்பாட்டாளர் தெரிவித்தார். அதேவேளை மூன்று நாள்கள் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழரசுக் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கம் எந்தக் கருத்துகளையும் முன்வைக்காமல் மௌனவிரதம் காத்தார். ஆனால் கருத்தரங்கு முடிவடைந்த பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அவர் விளாசித்தள்ளினார்.

சுவிட்ஸர்லாந்து சமஷ்டி முறை பற்றி தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு நன்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால், சுவிட்ஸர்லாந்தை விட்டு வெளியேறிச் செல்லும்போது விமானநிலையத்தில் அந்தச் சமஷ்டி ஆட்சி முறைச் சிந்தனையை கைவிட்டுச் செல்லக்கூடாது எனவும் சத்தியலிங்கம் கிண்டலாகச் செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டினார்.

2009 க்குப் பின்னர் இலங்கைத்தீவில் ஊழல்மோசடி - அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் மாத்திரமே உள்ளன என்ற தொனியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் குறிப்பாக அதன் செயலாளர் நிஹால் அபயசிங்க கருத்தரங்கில் தமது தரப்பு நியாயங்களை அவ்வப்போது வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய பல விளக்கவுரையில் வெளிப்படுத்திய சிங்கள-தமிழ் முரண்பாட்டுத் தன்மையின் ஆழத்தை அவர்களி

## இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை பற்றிய பேச்சுகள் தவிர்ப்பு

"அநுர அரசாங்கம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையைக்கூட அகற்ற விரும்பவில்லை" எனக் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டியபோது, அது முன்னைய அரசாங்கம் செய்த வேலைத்திட்டம் என்ற தொனியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டனரென கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் இந்தக் கட்டுரையாளரிடம் தெரிவித்தார். அதேநேரம் போர்க்குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை என்ற தமிழர்களின் ஆழமான கோரிக்கைக்குப் பதிலளித்த நிஹால் அபயசிங்க, ஜே.வி.பி. இலங்கைத்தீவில் நடத்திய 1972-1987 / 88 ஆம் ஆண்டு கிளர்ச்சிகளின்போது , சிங்கள இளைஞர்கள் யுவதிகள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாகவும் பல அவலங்களைத் தாங்கள் சந்தித்தாகவும் விளக்கினார். சிங்கள - தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலைகளை எதிர்கொண்ட காரண - காரியங்கள் ஆழமானவை. ஆனால் அவ்வாறு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தற்போதைய சூழலில் கைவிட்டு, புதிய அரசியல்பாதையை நோக்கிப் பயணிக்க கைகோர்க்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கருத்தரங்கில் கேட்டுக்கொண்டனர். ஜே.வி.பி.யின் போராட்டக் கால அநீதிகளையும் கூடுதலாக சுட்டிக்காட்டினர். அதேவேளை, கருத்தரங்கின் ஏற்பாட்டாளர் ஒருவர், "இந்தக் கருத்தரங்கு தொடர்ச்சியாக இடம்பெறவேண்டும் என்ற நோக்கில், கருத்தரங்கு தொடர



னால் நிராகரிக்கமுடியாத நிலைமை இருந்தது எனவும் தமிழ் இளையோர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கட்டுரையாளரிடம் விபரித்தார். இந்தக் கருத்தரங்கின் முடிவுரை தெளிவில்லை எனவும் அந்த இளையோர் அமைப்பின் பிரதிநிதிதெரிவித்தார்.

ஆயினும்மைத்திரி-ரணில் அரசாங்கத்தில்முன்மொழியப்பட்ட ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி ஆட்சி என்ற அதாவது 'ஏக்கிய இராஜ்ஜிய' என்ற முறையிலான அரசியல் யாப்பு ஒன்றையே அநுர அரசாங்கமும் முன்வைக்கவுள்ளது என்பதை இந்தக் கருத்தரங்கு வெளிப்படுத்தியுள்ளது. அதேநேரம் இந்தக் கருத்தரங்கில் போர்க்குற்றம் பற்றிய சர்வதேச விசாரணை தொடர்பாக தமிழர் தரப்பு வலியுறுத்தியிருந்தாலும், இன அழிப்புக்கான சர்வதேச நீதி அவசியம் என்பது குறித்து பேசப்படவில்லை எனவும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

உலக மக்கள் தொகையில்

**பாதுகாப்பாக முகாமை செய்யும் குடிநீருக்கான அணுகல் இல்லாதோர்**



நால்வரில் ஒருவர்

**பாதுகாப்பாக முகாமை செய்யப்படும் சுகாதார வசதியற்றோர்**



மூவரில் ஒருவர்



**திறந்த வெளிகளில் கழிவகற்றலை மேற்கொள்வோர்**



இருபத்து மூவரில் ஒருவர்


**எந்தவொரு சுகாதார வசதியுமற்றோர்**



ஐவரில் ஒருவர்



**மேற்பரப்பு நீரை அருந்துகிறார்கள்**



எழுபத்து ஆறு பேரில் ஒருவர்

தரவு மூலம்: உலக சுகாதார நிறுவனம், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்

## புலமையாளர் பதில்



**கேள்வி:** எமது மரபுரிமைச் சின்னங்களாகக் கருதப்படக் கூடிய கிராமப்புறக் கேணிகள் முக்கியமானவை என்றும் அவை மரபுரிமைச் சின்னங்களாகத் தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என்றும் அடிக்கடி கூறிவருகின்றீர்கள். இன்று எம் அன்றாட வாழ்வில் எதற்கும் பயன்படாமல் கிடக்கின்ற இக்கேணிகளை ஏன் காப்பாற்றவேண்டும்?

*(சுபாசினி, தாவடி)*

**பதில்:** பொதுவாக நன்னீர், நிலத்தடிநீர் வளத்தைப் பேணுவதிலும், பாதுகாப்பதிலும் நீரைத் தேக்கி வைக்கும் கேணிகள், குளங்கள் உள்ளிட்ட இந்தப் பௌதிக நீர்க் கட்டமைப்புகளும் பாரிய பங்குவகிக்கின்றன. எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற ஆலயக்கேணிகள் தொடக்கம் விவசாயத்திற்கான பாசனக் கேணிகள், கால்நடைகள் நீரருந்து கேணிகள், பிதிர்க் கடன் இறுக்கும் கேணிகள் வரை பல்வேறு தேவைகளுக்கான கேணிகள் உள்ளன. சமூக பண்பாட்டு தொழில்நுட்ப நிலை மாற்றங்கள் இக்கேணிகளின் முன்னைய காலத்து முக்கியத்துவத்தை இழக்கவைத்துள்ளன. ஆதலினால் பல்வேறு தேவைகள் நிமித்தம் அமைக்கப்பட்ட பண்டைய கேணிகள் பல தற்போது கைவிடப்பட்டுள்ளன. பாவனையற்று, பராமரிக்கப்படாது, தூர்ந்து, குப்பைகள் கொட்டப்பட்டு மாசடைந்து சிதைந்து அழிகின்றன.

ஆனால் இவற்றைப் பாதுகாத்து இன்றைய தேவைகளின் பின்னணியில் அவற்றை ஒன்றொன்றாக உருமாற்றுவதன் மூலம் அழிவிலிருந்து காப்பாற்றமுடியும் என்பதே எனது கருத்தாகும். இதற்கான சிறந்த உதாரணமாக இலங்கையின் பாரம்பரிய இராசதானிகளான அநுராதபுரம், பொலநறுவையில் காணப்படும் "பொக்குண" எனப்படும் கேணி அமைப்புகள் பாடசாலைப் பாடவிதானத்தில் சேர்த்து இணைக்கப்பட்டமையூடாக இளையதலைமுறையினரிடம் அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் கையளிக்கப்படுகிறது. அவை கட்டடக்கலை சார்ந்த நீர்வளநாகரிக வளர்ச்சியின் உன்னதத்தினை அவர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றன. அதேசமயம் அவை பாரம்பரிய சின்னங்களாக நிறுவப்பட்டு, அவை காணப்படும் இடங்கள் சுற்றுலாத் தளங்களாக்கப்பட்டுள்ளன. இதன் வாயிலாக சுற்றுலாத்துறை சார்பான வர்த்தக, பொருளாதார முன்னேற்றங்கள் நாட்டிற்கு பொதுவாகவும், அவை அமைந்துள்ள ஊர்களுக்குச் சிறப்பாகவும் கிட்டுகின்றன. இதன்மூலம் பாரம்பரிய, பண்பாட்டு அடையாளங்கள் அழிவுறாது பேணப்படுவதுடன், பொருளாதார வளத்தின் உயர்ச்சிக்கும் ஏதுவாய் அமைகின்றன.

நமது பிரதேசத்தில் காணப்படும் கேணிகள் தொடர்பிலும் இத்தகையதோர் அணுகுமுறையை கைக்கொள்வதன் மூலம் எம் பிராந்திய மரபுரிமைப் பேணுகையை உறுதிப்படுத்துவதுடன் எமது பண்பாட்டு வரலாற்றுக்கான தடயங்களையும் பாதுகாத்தவராவோம். அது எதிர்காலச் சந்ததிக்கு அத்தகைய கட்டுமானங்களின் முக்கியத்துவத்தையும், அவை காப்பாற்றப்பட வேண்டியமைக்கான தேவையினையும் தெளிவுபடுத்தும்.

இத்தகைய பின்னணியில் கைவிடப்பட்டுள்ள மேற்படி கேணிகளை அவை காணப்படும் பிரதேசத்தின் உள்ளூராட்சி அமைப்புகளோ, சனசமூக நிலையங்களோ, பொதுநல அமைப்புகளோ, நீர்வளம் சார்பான அமைப்புகளோ விஞ்ஞான முறைப்படி பேண முன்வரவேண்டும். இச் செயற்பாட்டில் பொதுமக்கள் பங்களிப்பு என்பது மிக முக்கியமானது. இவை கடந்த காலத்திற்கு உரியதோ, காலங்கடந்ததோ அல்ல, அவை இன்றைக்கும் நாளைக்குமான பிரதான முதலீடாகும்.

**கலாநிதி.பா.அகிலன்**
*முதுநிலை விரிவுரையாளர்,*
*கலை வரலாறு நுண்கலைத்துறை,*
*கலைப்பீடம்,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

### கடந்த மாத அமர்வு

## நிலத்தடி நீர் எங்கள் உயிர் நாடி : நல்லூரின் நீர்வளக்கண்காட்சி - 02

யாழ். பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர்வளத்தைப் பேணுவதற்கான பேராய்வு செயற்றிட்டத்தினால் (WASPAR) ஒழுங்கமைக்கப்பட்ட நீர்வளத்தைப் பேணுவதற்கான விழிப்புணர்வுக் கண்காட்சி இம்முறை இரண்டாவது தடவையாகவும் நல்லூர் திருவிழாக் காலப்பகுதியில் நடைபெற்றது. நல்லூர் ஆலயமருங்கில் கடந்த ஆவணி 15ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரையான பத்து நாள்கள் தொடர்ந்த இக்கண்காட்சியில் பிரதான கருப்பொருள்களாக "நிலத்தடிநீர் எங்கள் உயிர்நாடி" , "வழுக்கையாறும் வளமான நம் எதிர்காலமும்" என்பவை வெளிப்படுத்தப்பட்டன.

நீர்வள முகாமைத்துவம் சார்ந்த திணைக்களங்கள், சபைகள், துறைசார் வல்லுநர்கள், பள்ளி மாணவர்கள், தன்னார்வலர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்து மக்கள் மத்தியில் நீர் வளங்களைப் பேணல் தொடர்பான விழிப்புணர்வை மேற்கொள்வதை முதன்மை நோக்கமாகக்கொண்டு இக்கண்காட்சியின் கூறுகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.


நீர் வளம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தும் மாதிரிகள், பதாதைகள், நீர்க் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் சுவரோவியங்கள், மாணவர்கள் வரைந்திருந்த சித்திரங்கள், அனைவரும் பங்கேற்கும் போட்டிகள், ஆற்றுகைகள் என அனைத்து அம்சங்களும் மக்களின் பெரு வரவேற்பைப் பெற்றன. ஆயிரக்கணக்கான அடியவர்களின் நன்மதிப்பைப் பெற்ற இக் கண்காட்சியில் "ஊருணி" எனும் பெயரிலே, கண்காட்சி நிகழ்ந்த பத்து நாள்களும் மாலை வேளைகளில் அரங்காற்றுகை நடைபெற்றமை சிறப்பம்சமாகும்.

இக்களத்தில்நிகழ்ந்தஆற்றுகைகளில்பெரும்பாலானவை, நீரைப் பேசுபொருளாகக் கொண்டிருந்ததோடு, "தண்ணீரின் கதை" எனும் குறுநாடகத்தின் மூலம் நீருக்காக நாம் கையேந்தி இருக்கும் ஒரு காலம்கூட வரலாம் என்ற செய்தியை, "செம்முகம்" அரங்காற்றுகைக் குழுவினர் மனதை உருக்கும் வகையில் வெளிக்கொணர்ந்திருந்தனர். இவ்வாற்றுகை பெற்றுக்கொண்ட வரவேற்பின் காரணமாக இந்நாடகம் இரண்டாம் முறையும் இறுதிநாளின் சிறப்பம்சமாக அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

ஊருணி அரங்கில் நடந்த மாலைநேர உரையாடல்களின் போது WASPAR செயற்றிட்டம் நிறுவியுள்ள வடக்கின் நீர்வள உரையாடல் வட்டம் மற்றும் இளம் நீர் வாண்மையாளர் வட்டம் எனும் இரு வட்டங்களின் வகிபாகம் முன்னிலைப்படுத்தப்பட்டது. இதை விட துறைசார் அனுபவம் மிக்க ஆய்வாளர், பேச்சாளர்களாக அகிலன் பாக்கியநாதன், மயூரநாதன், நிலாந்தன் ஆகியோர் பாரம்பரியக் கேணிகள், யாழ்ப்பாணக் குளங்கள், யாழ் குடாநாட்டில் இன்றும் காணப்படுகின்ற வெளிகள், வெட்டைகள் என்னும்தலைப்புகளில்முன்வைத்த ஆழமான கருத்துகள் பலரது வரவேற்பையும் பெற்றிருந்தன. யாழ்ப்பாணச் சமூகத்தின் பார்வையிலும், பிரக்ஞையிலும் இருந்து விலகிக்கொண்டே செல்லும் மேற்கூறிய பாரம்பரிய நீர் தாங்கும் கூறுகள் பற்றிய அக்கறையும், அதற்கமைவாக இந் நீர் நிலைகள், அவற்றின் மூலங்களைப் பேணிப்பாதுகாப்பதற்கான செயற்றிட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் முன்னெடுப்பது உடனடித் தேவையாக வெளிவந்துள்ளது.

## இளையோர் பார்வை

### நான் மரம் பேசுகிறேன்



மனிதா! என்னைத் தெரிகிறதா?
பூமியில் வாழ வழிதேடும் என் குரல் கேட்கிறதா?
ஏன் எம்மை வெட்டி வீழ்த்துகிறீர்? – உமக்கு
கனிகள் தந்தோம்! தண்ணிழல் தந்தோம்!
பசுமை தந்தோம்! யாவுமாய் இருந்தோம்!
நன்மை புரியும் எம்மை ஏன் அழிக்கிறீர் – என்றும்
நாமே இப்பூவுலகின் காவலர்கள் – எம்மை
வெட்டிச் சிதைக்காதீர்! விதைத்து வாழவிடுவீர்!

**சு.கிதுர்ஷன்**
தரம் 6, கொக்குவில் இந்துக் கல்லூரி

*எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி துளியின் 18 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளர்ப்தினம்

இராகவன்

பாகம் 3

நாகராசனோடு எனக்குமொரு நேரடி அனுபவமிருக்கு. என்ர அம்மான்ர இரண்டாவது தமக்கை புவனேஸ்வரி. அவ கடைசியா கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயத்தில (பெண்கள் பாடசாலை) படிப்பிச்சுப் பெஞ்சன் எடுத்தவ. ஊராக்கள் அவவைப் புவனம் ரீச்சர் எண்டு சொல்லுவினம். நாங்கள் புவனப் பெரியம்மா எண்டு கூப்பிடுவம். அவவின்ர மனிசன் கந்தப்பு வாத்தியார். கடைசியாப் புற்றளைப் பள்ளிக்கூடத்திலை படிப்பிச்சுப் பெஞ்சன் எடுத்தவர். ஊராக்கள் அவரை கந்தப்பு மாஸ்டர் எண்டு சொல்லுவினம். நாங்கள் கந்தப்புப் பெரியப்பா எண்டு கூப்பிடுவம். நானொருக்கால் அவையின்ர வீட்டை போகேக்குள்ளை கந்தப்புப் பெரியப்பா, "புண்ணியவாளா! (அவர் என்னைப் புண்ணியவாளன் எண்டுதான் வழமையாகக் கூப்பிடுவார்) உந்த உலக்கைக்கு ஒருக்கால் பூண்போடவேணும். உனக்கு ஆரும் அணைவான ஆக்களிருக்கினமோ?" எண்டு கேட்டார். எனக்குடன நாகராசன்ர முகம்தான் ஞாபகம் வந்திச்சுது. நானும் வாயைச் சும்மா வைச்சிருக்காமலுக்கு, "ஓமோம்! ஒராளிருக்கு. தாங்கோ போடுவிச்சுத்தாறன்" எண்டு வேலியில போன ஓணானைப் பிடிச்சுச் சாறத்துக்கை விட்ட மாதிரிச் சொல்ல, அவரும் உலக்கையையும் அதுக்குப் போடவேண்டிய பூணையும் காசோட தூக்கித்தந்தார்.

நானும் தெரியாத்தனமாக் கொண்டுபோய் நாகராசனிட்ட விலாசமாய் உலக்கையோட பூணையும் குடுத்திட்டன். "நாளைக்குப் பின்னேரம் வாங்கோ! போட்டு வைக்கிறேன்" எண்டு ஆள் சொன்னார். நானும் அதை நம்பி மறுநாள் பின்னேரங் கணக்காப் போனன். ஆள் வாயெல்லாம் பல்லாகச் சிரிச்சுக்கொண்டு வந்து, "குறைநினைக்காதேங்கோ! ஒரு முக்கியமான வேலை வந்திட்டுது. அது முடிச்சு இப்பதான் வந்தனான். உங்கடை வேலைதான் செய்யப்போறன். கொஞ்சம் நிண்டியள் எண்டால் வேலையை முடிச்சுக் கையில தாறன்" எண்டார். நானும் ஏதோ அவசர அலுவலாப் போய்க்கொண்டிருந்தன். அந்தாளோட மினக்கெட நேரமில்லை. அதால, "உதிலயொருக்காப் போட்டுவாறன் போட்டுவையுங்கோ!" எண்டுட்டுப் போகிட்டன். திருப்பிவரப் பொழுதுபட்டுப்போச்சு. எப்பிடியும் வேலை முடிஞ்சிருக்கும் நாளைக்கு எடுக்கலாம் எண்டு நினைச்சுக்கொண்டு வீட்டை வந்திட்டன். அடுத்தநாள் காலமை போனால் ஆள் வீட்டிலையில்லை. ஏதோ அலுவலா வெளியில போகிட்டார் எண்டு சொல்லிச்சினம். பிறகு பின்னேரம் போனன் அதே பல்லவிதான்.

இப்பிடியே ஒரு கிழமையா அலைஞ்சு களைச்சுப் போனன். அதுக்கை கந்தப்புப் பெரியப்பா காணுற நேரமெல்லாம், "என்ன புண்ணியவாளன் உலக்கை என்னமாதிரி?" எண்டு கேட்டபடியிருந்தார். அதால இரண்டு மூண்டு நாள் நான் அந்த வீட்டுப்பக்கமும் தலைகாட்டேல்ல. ஒருநாள் மதியம் திரும்புற நேரமாப் பார்த்து நாகராசன் வீட்டை போனன். அத்திமரம் பூத்தமாதிரி ஆள் வீட்டிலயிருந்தார். அப்பதான் ஆள் தவறணையால திரும்பியிருக்கவேணும் போலை. சாதுவான வெறியில நிண்டார்.

"இண்டைக்கு எனக்கு உலக்கை வேணும்!" எண்டு கம்மாலைக்குள்ள குந்தியிட்டன். "அண்டைக்கே நிண்டு செய்து கொண்டுபோயிருந்தால் உந்தக் கயிட்டம் வந்திருக்காது" எண்டு ஆள் சினந்தார். இடைக்கிடை வாயில தூசணங்களும் வந்துகொண்டிருந்தது. எனக்குத் தெரியாத தூசணமே? எண்டிட்டு நான் இருந்த இடத்தை விட்டு அசையவேயில்லை.

(தொடரும்)

46

# அறிந்தும் அறியாமலும்

எம்.முபாறக்

## யானையில் சேர்க்க நரித்தந்திரம்



ரெலிபோனையும், யானையையும் இணைப்பதற்காக, யானைக்கட்சியின் பக்கம் கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த ஆட்சிக்காலத்தில் அதாவது, சஜித் யானைக் கட்சியில் இருந்த காலப்பகுதியில் அதன் தலைமையகமான சிறிகொத்தாவை புனரமைப்புச் செய்வதற்காக அரச பொறியியலாளர்களை பயன்படுத்தி இருந்தார். 'அந்தக் குற்றச்சாட்டின் கீழ் நீங்கள் திசைகாட்டி அரசால் கைது செய்யப்படவுள்ளீர்கள்' என்று யானைக்கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் சஜித்திடம் கூறியுள்ளனர்.

அதில் இருந்து தப்புவதற்காக சட்ட ஆலோசனையை நாடுமாறு ரணில், சஜித்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் என்று ரணிலுக்கு நெருக்கமானவர்கள் சஜித்திடம் கூறியுள்ளனர். 'இதற்காக ரணில் உங்களுடன் பேசுவதற்கு விரும்புகிறார். வந்து சந்தியுங்கள்' என்றும் அடிக்கடி அவர்கள் சஜித்துக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து அந்தத் தூதர்கள் நச்சரித்துவந்தனர். வட்ஸ் அப்பிலும் செய்தி அனுப்பியபடி இருந்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் சொன்னது போல அப்படியொரு கைது நடவடிக்கையே இல்லையாம். சஜித்தை இப்படி வெருட்டி, யானைக்கட்சியுடன் இணைப்பதற்கான தந்திரம் தான் இது என்பதை அறிந்த சஜித், யானைக்கட்சியின் அந்தத் தூதுவர்களின் தொலைபேசி இலக்கங்களை 'ப்ளக்' செய்துவிட்டாராம்.



## எடுபடாத நாடகம்

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவது தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக, ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அந்த அதிகாரிகள் என்ன செய்யவேண்டும் என்று அந்தச் சந்திப்பில் ஜனாதிபதி அறிவுரை வழங்கினார். சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனேயே முன்னாள் ஜனாதிபதிகளை அந்த வீடுகளில் இருந்து அனுப்பத் தேவையில்லை. 'அந்த வீடுகள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின்கீழ் வந்துள்ளன என்பதைக் கடிதம்மூலம் தெரியப்படுத்துதல், அவர்கள் வெளியேறுவதற்கு கால அவகாசம் வழங்குதல், அப்போதும் வெளியேறாவிட்டால் நீதி மன்றத்தை நாடுதல்.' - இதுதான் ஜனாதிபதி வழங்கிய ஆலோசனை. ஆனால், சந்திரிகாவைத்தவிர எல்லோரும் வெளியேறிவிட்டனர். மஹிந்த இதில் அரசியல் இலாபம் அடைவதற்காக சட்டமூலம் நிறைவேற்றப்படும் இறுதிக்கணம் வரை காத்திருந்தார். மறுநாள் மக்களை வரவழைத்து அவர்களின் முன்னிலையில் அனுதாப அலை ஒன்றை உருவாக்கி அங்கிருந்து வெளியேறி ஒரு சோக நாடகத்தை அரங்கேற்றினார். ஆனால் முன்னைய காலங்களைப் போல இம்முறை அந்தநாடகம் எடுபடவில்லை என்பதுதான் பரிதாபம்.

## ஹேமா 'கிரேட்'

முன்னாள் ஜனாதிபதிகளினதும் அவர்களது கணவர் அல்லது மனைவிமார்களினதும் சலுகைகளை நீக்குவதற்கு இந்த அரசு இப்போது நடவடிக்கை எடுத்துள்ளபோதிலும் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஆர்.பிரேமதாஸவின் பாரியார் ஹேமா பிரேமதாஸ அந்தச் சலுகைகளை 2019 லேயே கைவிட்டுவிட்டார் என்பது யாருக்கும் தெரியாது. இந்தச் சலுகைகளை நீக்குவது தொடர்பில் சட்டமூலம் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்ததும் அதற்கு எதிராக களமிறங்கிய முன்னாள் ஜனாதிபதிகள் ஹேமாவிடம் கையெழுத்துக் கேட்டபோது, அவர் கையெழுத்திட மறுத்துவிட்டார். 'இந்தச் சலுகைகளை நீக்குவதென்பது இந்த அரசு மக்களுக்கு கொடுத்தவாக்குறுதி. அதற்கு எதிராக நான் செயற்படமாட்டேன்' என்று ஹேமா கூறிவிட்டார். இதன்பின்தான் ரணிலும் சந்திரிகாவும் இந்தப் போராட்டத்தில் இருந்து பின்வாங்கினராம். உண்மையில் சஜித்தின் அம்மா நேர்மையானவர்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கைமுறைக் கருக்கட்டலும் அறிந்திருக்க வேண்டியவையும்





**மருத்துவ நிபுணர் சி.ரகுராமன்**
பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

## அறிமுகமும் [illegible]ங்களும்

சமூகமொன்றின் அடிப்படை தொழிற்பாட்டு அலகான குடும்பமொன்று முழுமை அடைவதற்கும் சந்ததியொன்று அழிவடையாமல் விருத்தியடைவதற்கும் குழந்தைபேறு என்பது மிக முக்கியமானதொரு வரப்பிரசாதம் ஆகும். எனினும் குழந்தையின்மை கருத்தங்காமை, கருத்தரித்தல் தாமதமடைதல் போன்று பல சொற்பதங்களால் பேசப்படுகின்ற விடயம் இந்தக் காலத்தில் மிகவும் பொதுவாகக் காணக்கூடிய ஒரு பிரச்சினையாகும். குழந்தையின்மை உலகளவில் மட்டுமல்ல இலங்கையிலும் தற்போது அதிகரித்துவருகின்ற ஒரு முக்கியமான மருத்துவ, குடும்ப, சமூகப் பிரச்சினையாகும். உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Orgnaization WHO) அறிக்கையின் படி ஏறத்தாழ 48 மில்லியன் தம்பதியினர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏறத்தாழ 6 தம்பதியினரில் ஒரு தம்பதியினருக்குக் கருத்தரித்தல் தாமத நிலை காணப்படுவதோடு, யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை ஐந்தில் ஒருவரால் இந்த நிலை அனுபவிக்கப்படுகிறது. கருவுறுதலில் தாமதம் என்பது, ஒரு தம்பதியினர் எந்தவொரு கருத்தடை முறையையும் பயன்படுத்தாமல் தொடர்ந்து ஒரு வருடத்துக்கும் மேலாக உடலுறவில் ஈடுபட்டும் கருத்தரிக்க முடியாத நிலையாக வரையறுக்கப்படுகிறது. இதனடிப்படையில், கருவுறாமை இரண்டு வகைப்படுத்தப்படுகிறது:

முதலாம் நிலை கருவுறாமை - ஒருபோதும் கருத்தரிக்கமுடியாத நிலை

இரண்டாம் நிலை கருவுறாமை - ஒருமுறை கருத்தரித்த பின், மீண்டும் கருத்தரிக்க முடியாத நிலை (ஏற்கனவே கருத்தரித்து குழந்தை பெற்றெடுத்தல் கருச்சிதைவு ஏற்பட்டிருத்தல் என்பன இதில் உள்ளடக்கப்படும்)

கருத்தரிக்கமுடியாமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். இவ்வாறான நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய காரணிகள் 30% ஆண் சார்ந்ததாகவும், 30 % பெண் சார்ந்ததாகவும், 20% ஆண் மற்றும் பெண் என தம்பதியினர் இருவர் சார்ந்ததாகவும், 20% விபரிக்கப்படாத காரணிகளாகவும் காணப்படுகின்றன. இதனால் குழந்தையின்மை என்பது மருத்துவ ரீதியாக ஒரு தனிநபர் சார்ந்த பிரச்சினையாக அல்லாமல் ஒரு தம்பதியினருக்கான பிரச்சினையாக பார்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்படுகிறது. தம்பதியர்கள் இருவருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் சிகிச்சைகள் திட்டமிடப்படும்.


## சிகிச்சை வகைகள்

கருத்தரிக்கவேண்டிய திறனை அதிகரிக்கப் பல வகையான சிகிச்சைகள் உள்ளன. முதலில், அடிப்படைச் சிகிச்சைகளாக கருமுட்டை வளர்ச்சிக்கான மருந்துகள் கொடுக்கப்படலாம். அல்லது சரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விந்தணுக்களை கருப்பைக்குள் செலுத்தும் IUI (Intra Uterien Insemmiantion) எனும் முறை பயன்படலாம்.

அதற்கு மேல் சில நேரங்களில் மேம்பட்ட சிகிச்சைகள் தேவைப்படலாம். உதாரணமாக, செயற்கை முறையில் கருக்கட்டல் செய்வது (IVFIn Vitro Fertilization), ICSI Intracytoplaslc Sperm Injection) அல்லது பிறரின் கருமுட்டை/விந்தணு பயன்படுத்தும் முறைகள் அடங்கும்.

## செயற்கைமுறை கருக்கட்டல்

செயற்கை முறை கருக்கட்டல் தொழில்நுட்பம் என்பது ஒருவகை இனப்பெருக்க சிகிச்சைத் தொழில்நுட்பமாகும். இதன்போது ஒன்றுக்கும் மேற்பட்ட கருமுட்டைகளின் வளர்ச்சி தூண்டப்பட்டு முதிர்ச்சியடைந்த கருமுட்டைகளும், விந்தணுக்களும் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கூடத்தில் கருக்கட்டல் தூண்டப்பட்டு கருக்கட்டிய கரு தரப்படுத்தப்பட்டு ஆரோக்கியமான கரு(embryo) கருப்பையினுள் உட்செலுத்தப்படும். செயற்கை முறையில் கருத்தரிப்புச் சிகிச்சை, கருத்தரிப்புத் தாமதம் ஏற்படும் தம்பதிகளுக்குச் சில குறிப்பிட்ட காரணங்களுக்காகப் பரிந்துரைக்கப்படுகிறது. இது, இரண்டு பலோப்பியன் குழாய்கள் அடைபடுதல், முட்டை வளர்ச்சி இன்மை, விந்தணுக்களில் காணப்படும் குறைபாடுகள், அல்லது அடிப்படைச் சிகிச்சை முறைகள் வெற்றியளிக்காத சந்தர்ப்பங்கள் போன்ற காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும். குறிப்பாக, காரணம் தெளிவாக இல்லாமல் நீண்டகாலம் கருத்தரிக்கமுடியாத தம்பதிகளுக்கு இச்சிகிச்சை மிகவும் பயனுள்ளதாக இருக்கக்கூடும். இதைச் சில தம்பதிகள் முதற்கட்டமாகவே தேர்வுசெய்ய விரும்புகிறார்கள். IVF சிகிச்சை முறையில் பல்வேறு நிபுணர்கள் ஒருங்கிணைந்து செயற்படுகின்றனர். மகப்பேறு மருத்துவர்கள் கருத்தரிப்பு சிக்கல்களுக்கு சிகிச்சை அளிக்கும் பிரதான நிபுணர்கள். அவர்கள் சிகிச்சைத் திட்டத்தை உருவாக்கிக் கண்காணிக்கிறார்கள். அனுபவமிக்க தாதியர்கள், தம்பதிகளை வழிநடத்தி, மருந்து உபயோகத்தை விளக்கி, ஆதரவு அளிக்கின்றனர். எம்ப்ரியோலஜிஸ்ட் என்பவர்கள் கருமுட்டை மற்றும் விந்தணுவை ஆய்வுகூடத்தில் இணைத்து, கருவை உருவாக்கும் முக்கிய பணியை செய்கிறார்கள். இவர்கள் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவு மற்றும் நுணுக்கமான ஆய்வகச் செயல்களைக் கையாளும் திறன் கொண்டவர்களாக இருப்பதுடன், ஆராய்ச்சி செய்வதற்கான திறமையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் இரத்தம் மற்றும் ஹார்மோன் பரிசோதனைகளைச் செய்து, சிகிச்சைக்குத் தேவையான தரவுகளைத் தருகின்றனர். உளநல ஆலோசகர்கள் தம்பதிகளின் உணர்ச்சி நிலையைக் கவனித்து, மன அழுத்தம் மற்றும் பயங்களைக் குறைத்து, அவர்களைத் தைரியமாகவும் நம்பிக்கையுடனும் இந்தச் சிகிச்சையில் ஈடுபட உதவுகின்றனர். இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த அணியாகச் செயற்பட்டு, தம்பதிகளுக்குச் சிறந்த சிகிச்சை மற்றும் பராமரிப்பை வழங்க உறுதி செய்கிறார்கள்.




## சிகிச்சை பெறும் இடத்தைத் தெரிவு செய்தல்

இந்த மேம்பட்ட சிகிச்சைகள் உயர் தொழில்நுட்ப வசதிகள் தேவைப்படுவதால், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய ஆய்வுகூடம் மற்றும் சத்திரசிகிச்சைக் கூடம் கொண்ட மருத்துவ மையங்களில் நடைபெறவேண்டும். எனவே IVF சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன், நாம் சிகிச்சை பெறவுள்ள மருத்துவமனை குறித்து கவனமாக சிந்திக்க வேண்டும். அந்த மருத்துவமனையில் தேவையான வசதிகள் அனைத்தும் உள்ளனவா? IVF ஆய்வுக்கூடம் மருத்துவ ஆய்வுக்கூடம், அவசர சிகிச்சைப்பிரிவு மற்றும் உளநல ஆலோசனைச் சேவைகள் போன்ற ஆதரவுகள் உறுதியாக உள்ளனவா என்பதையும் கவனிக்க வேண்டும். சில நேரங்களில் போதிய வசதிகள் இல்லாத இடங்களில் சிகிச்சை மேற்கொள்வது, சிக்கல்கள், தாமதங்கள் மற்றும் சிகிச்சையில் குறைந்த வெற்றி வீதத்தை ஏற்படுத்தும், எனவே, மருத்துவமனையின் தரம் மற்றும் வளங்கள் IVF மாதிரியான நுட்பமான சிகிச்சைகளில் மிகவும் முக்கியம். இது வெற்றிகரமான கர்ப்பம் மற்றும் தாயாரின் பாதுகாப்புக்கான அடிப்படை வழிகாட்டியாக அமைகிறது. எனவே சிகிச்சைக்காகச் செல்லும்போது, இவ்வாறான அனைத்து அம்சங்களையும் முன்கூட்டியே அறிந்திருப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## சிகிச்சைக்கு முன்னும் பின்னும்

சிகிச்சைக்கு முன்பாக, தம்பதிகளுக்கு முழுமையான மருத்துவ மற்றும் உளநல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இதன்போது, முந்தைய சிகிச்சை முயற்சிகள் பரிசீலிக்கப்படுவதுடன், சில முக்கியமான நோய்நிலைகள் மற்றும் உடல் நிலைகளை கண்டறிய விரிவான மருத்துவக் கணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னர், இரத்தப் பரிசோதனைகள், ஹார்மோன் பரிசோதனைகள், விந்தணு மற்றும் கருமுட்டைத் தரம் மதிப்பீடு போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பரிசோதனைகளின் முடிவுகளின் அடிப்படையில், மருத்துவ நிபுணர்கள் [illegible] தம்பதிகளுக்கேற்ற சிகிச்சைத் திட்டத்தை வகுக்கின்றனர். பல தம்பதியர் சிகிச்சையைத் தொடங்கும் முன்பே மன அழுத்தம், நம்பிக்கைக் குறைபாடு மற்றும் சமூக அழுத்தங்களால் பாதிக்கப்படுவதால், உளவியல் ஆலோசனை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. மேலும் தியானம், யோகா, உடற்பயிற்சி உணவுப்பழக்கங்களில் தேவையான மாற்றங்கள், சிகரெட் மற்றும் மதுபானங்களைத் தவிர்த்தல் போன்ற உள உடல் நலன்களை மேம்படுத்துவதுடன், சிகிச்சையின் வெற்றியை உயர்த்தும். உடல் எடை கருத்தரிப்பின் திறனை நேரடியாகப் பாதிக்கக்கூடியவை. அதிக உடல் எடை என்பது கருத்தரிப்புத்திறனை குறைப்பதுடன், IVF சிகிச்சையின் வெற்றியையும் பாதிக்கக்கூடும். எனவே, அதிக உடல் எடை உள்ளவர்கள் முறையான உடற்பயிற்சி மற்றும் சீரான உணவமைப்பைப் பின்பற்றுவது அவசியமாகும். பலரும் சிகிச்சை பெறும் காலத்தில் உடற்பயிற்சி அல்லது வேலை செய்வது தவறு என நினைப்பது, ஒரு தவறான கருத்தாகும். மருத்துவ நிபுணரின் ஆலோசனையின் கீழ் சரியான உடற்பயிற்சி மற்றும் சீரான உணவுப் பழக்கங்களைக் கடைபிடிப்பதன் மூலம், உடல் மற்றும் உளநலத்தை மேம்படுத்தி, சிகிச்சையின் வெற்றிவீதத்தையும் அதிகரிக்க முடியும். எனவே, தம்பதிகள் தங்களது உடல் மற்றும் உளநல நிலையைச் சீர்ப்படுத்தும் விதமாக வாழ்க்கைமுறையில் மாற்றங்களை மேற்கொண்டு சிகிச்சையில் ஈடுபடுவது அவசியமாகும். இவ்வாறு ஒருங்கிணைந்த, திட்டமிட்ட மற்றும் ஒவ்வொரு தம்பதியினருக்கும் ஏற்ற, சிகிச்சை முறையைப் பின்பற்றும்போது, கருத்தரிப்பு சிகிச்சையின் வெற்றிவாய்ப்பு அதிகரிக்கின்றது.

## செலவைத் திட்டமிடுதல்

மேம்பட்ட கருத்தரிப்புச் சிகிச்சைகள் பொதுவாக அதிக செலவுடைய சிகிச்சை முறையாகும். எனவே, சிகிச்சை முறையைத் தேர்வுசெய்வதற்கு முன், தம்பதிகள் பரிந்துரைக்கப்படும் சிகிச்சை பற்றிய தெளிவான மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும். அதன் பின்னர், மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து சிகிச்சையுடன் தொடர்புடைய முழுமையான செலவுத் தகவல்களைத் திரட்டுவதும் மிகவும் அவசியம், இது, எதிர்பாராத செலவுகளுக்கு ஆட்படாமல், பொருளாதாரத்துக்கேற்பத் திட்டமிட உதவிகரமாக இருக்கும். திட்டமிடல் மற்றும் பொருளாதாரத் திட்டவட்டத்துடன் சிகிச்சையைத் தொடங்கும் போது, மனஅழுத்தம் குறையும், சிகிச்சையின் தொடர்ச்சி எளிதாகும், மேலும் வெற்றியின் வாய்ப்பும் அதிகரிக்கும்.

கருத்தரிப்புச் சிகிச்சை போன்ற முக்கியமான மருத்துவ நடைமுறைகளில், கணவன் மற்றும் மனைவியிருவரின் முழுமையான அறிவுத் தேர்ந்த ஒப்புதல் (ifnormed consent) பெற்றிருப்பது மிகவும் அவசியமாகும். இச் சிகிச்சையின் தன்மை, நடைமுறை, சாத்தியமான வெற்றி விகிதம், கூடக்கூடிய சிக்கல்கள் மற்றும் மாற்றுச்சிகிச்சைகள் பற்றி இருவரும் தெளிவாகப் புரிந்துகொண்டு சம்மதம் அளிக்க வேண்டும். இது அவர்களின் உடல், மனம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் ஒரு முக்கியமான முடிவாக இருப்பதால், இருவரும் இணக்கம் மற்றும் புரிதலுடன் இணைந்து இந்தச் செயல்முறையில் ஈடுபடவேண்டும். இந்த ஒப்புதல், சிகிச்சையின் நெறிப்படுத்தப்பட்ட மற்றும் நியாயமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதுடன், தம்பதிகளுக்கு பாதுகாப்பும் நம்பிக்கையும் வழங்கும்.

செயற்கை முறையில் கருத்தரிப்பு என்பது கருத்தரிப்புச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்துவரும் தம்பதிகளுக்கு ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும் பரிசாக இருக்கிறது. இருப்பினும், இந்தச் சிகிச்சை முறையின் வெற்றிக்கு, முழுமையான உடல், துல்லியமான மருத்துவ ஆலோசனை, மற்றும் வாழ்க்கைமுறையில் தேவையான மாற்றங்கள் ஆகியவை அவசியமாகின்றன. ஒவ்வொரு தம்பதியருக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள், உடல்நிலை வேறுபாடுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் உள்ளதனால், அவரவர் தேவைகளுக்கேற்பத் திட்டமிடப்பட்ட சிகிச்சை முறைதான் வெற்றியை வழங்கும். இது ஒரு சாதாரண மருத்துவ சிகிச்சை அல்ல வாழ்க்கைமுறை, மனநிலை மற்றும் உடல்நலத்திற்கு ஒருங்கிணைந்த அணுகுமுறை தேவைப்படும் ஓர் முழுமையான பயணமாகும்.

(அடுத்த வாரமும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்றவாரத் தொடர்ச்சி)



# அந்தோன் சேகவின் மூன்று ஆண்டுகள்

○ நா.நவராஜ்



## மனம் பொருந்தா மணமக்களின் மனப்போராட்டம்

லாப்தேவ் தனது காதலை யூலியாவிடம் சொல்லும்போது ' நீங்கள் மட்டும் என் மனைவியாக இருக்க இசைந்தால், எனக்குரியதையெல்லாம் கொடுத்து விடுவேன். ஒவ்வொன்றையும்... உங்களுக்காக எந்த விதத் தியாகத்தையும் நான் செய்யத் தயார்' என்கிறான். இதனைப் பேசும்போதே அவனுக்கு அவனது குரல் மற்றொருவனது போலத் தெரிகிறது. அவள் மறுக்கிறாள். அவன் ஆத்மாவின் விளக்கு அணைந்துவிட்டதுபோல் ஓர் உணர்ச்சி ஏற்பட்டு அவன் மனோநிலை சட்டென்று மாறுகிறது. தான் மற்றவர்கள் விலகி ஓடும் அளவிற்கு அசிங்கமானவன் என்ற தாழ்வுச் சிக்கல் உள்ளத்தை அரிக்கத் தனக்குள் 'எல்லாத்தையும் கொடுத்து விடுவேனாம் சரியான வியாபாரியப்பா நீ! யாருக்கப்பா வேண்டும் உனக்குரியதெல்லாம்?' என்று மனதோடு பலவாறு புலம்பிச்செல்கின்றான். யூலியாவைக் காணப்போகும்போது வழியில் உள்ள இயற்கைக்காட்சிகளை இரசித்தபடி காதல் உணர்வோடு செல்லுமவன் காதல் மறுக்கப்பட்டுத் திரும்பி வரும்போது அவை அவனுக்கு அற்பமாகத்தோன்றுகின்றன. மனிதன் மனக்குறையோடும் மகிழ்ச்சியின்றியும் இருக்கும் போதெல்லாம் அவை அப்படித்தான் தோன்றும் என எழுதும் சேகவ் அவன் நொடிந்து வலுவற்றுப் படுக்கையில் சாய்ந்து ஐந்தே நிமிடத்தில் உறங்கிவிடுகின்றான் என்கிறார்.

யூலியாவைப் பொறுத்தவரையில் அவளது வாழ்வும் சிக்கற்தன்மை நிறைந்ததாகவே இருக்கிறது. அவளுக்குத் தாயார் இல்லை. தகப்பனார் ஒரு மருத்துவர். அவருடன் இருந்தே அவள் வளர்ந்துவருகின்றாள். அவரைப் பற்றிச் சேகவ் குறிப்பிடும்போது பருத்த உடலும், சிவந்த முகமும் உடையவர். 'ரூரூரூரூ' என்று வாயால் இசைத்தவாறே தனது படிப்பறையில் அங்குமிங்கும் நடைபோட்டுக் கொண்டிருந்தார். அவரது படிப்பறை அவரைப்போலவே அலங்கோலமாகக் காட்சி அளித்தது என்கிறார். அத்தோடு அவர் ஒரு தொட்டாற் சிணுங்கி, தம்மை நோயாளிகள் நண்பர்கள் சுரண்டுகின்றனர் என்று எப்போதும் கற்பனை செய்துகொள்ளும் ஒருவராகவும் தன்னையே நையாண்டி செய்யும் ஒருவராகவும் இருந்தார் எனக்குறிப்பிடுகின்றார். இத்தகைய ஒருவரோடு இருந்து மனஉளைச்சலுக்கு உள்ளான ஒருவளாக யூலியா வாழ்ந்துவருகின்றாள். அவளுக்கு ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வதே மன ஆறுதலாக இருக்கின்றது. அதனால் அவள் தன்னை எதிரான உணர்வுகள் ஆட்கொள்ளாமல் பாதுகாத்து வருகின்றாள். இத்தகையவள் லாப்தேவைக் காதலிக்கவில்லை. அவன் காதலிப்பதாகக் கூறியபோதே அவள் அதனை அறிகின்றாள். மறுக்கின்றாள். எனினும் இரவில் நித்திரையின்றி அது பற்றிச் சிந்திக்கின்றாள். தகப்பனுடன் அது பற்றிக் கதைப்பதற்குச் செல்கின்றாள். அவர் அதனைக் கேட்டதும் 'மனதார உன்னை வாழ்த்துகிறேன். இப்போது என்னைவிட்டுப் போக உனக்கு அற்புதமான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. நீ செய்யப்போவது சரிதான். கிழட்டுக் கட்டையோடு, நோய் பிடித்த அரைப் பைத்தியமான ஒரு பிறவியோடு ஓர் இளம்பெண் வாழ்வது கடினம் தான்.....' என்று தொடர்ந்துபேசுகின்றார். அவள், தான் அதனை ஏற்க மறுத்துவிட்டேன் என்றதும். மனதுக்குள் சந்தோஷப்படும் அவர் வழமைபோன்று தன்னை அடக்கிக்கொள்ளமுடியாமல் , தன்னைப் பற்றிப்பேசத்தொடங்குகின்றார். 'உங்களோடு பேசுவதே முடியாத காரியம் அப்பா' என மனமுடைந்த யூலியா தனது அறைக்குத் திரும்பிவழமைபோலதனித்து இதுபற்றிச்சிந்திக்கின்றாள். அவள் சிந்தனைகள் அவளது வயதுக்கேற்றவகையில் நகர்கின்றன. லாப்தேவின் தோற்றம் தனக்குப் பிடிக்காததால் அவனை வெறுப்பது சரியா, அவனை மணப்பதென்றால் தனது கனவுகளையெல்லாம் காற்றில் பறக்கவிட வேண்டியதுதான், மணவாழ்க்கை பற்றித்தான் கட்டிய மனக்கோட்டைகளை எல்லாம் தகர்த்துவிட வேண்டியது தான்; ஆனால் தான் கனவு காணும் அந்த மனிதனை என்றேனும் சந்திக்கமுடியுமா? எனச் சிந்திக்கும் அவள், நகரத்தில் உள்ள தனக்குத் தெரிந்த ஆடவர்களை மனதில் எண்ணிப்பார்க்கிறாள். அவர்கள் எல்லாம் திருமணம் முடித்து உள்ளனர். சிலர் மந்தமான ஒழுக்கங்கெட்ட வாழ்க்கை வாழ்கின்றனர். ஆனால் லாப்தேவ் மாஸ்கோ வாசி, பல்கலைக்கழகப்பட்டம் பெற்றவன், பிரஞ்சுமொழியும் பேசுகிறான். வியக்கத்தக்க மனிதர்கள் பலர் வசித்த தலைநகரில் வசிக்கின்றான். அங்கு அற்புதமான நாடகசாலைகள், இசைக்கச்சேரிகள், மிட்டாய்க்கடைகள் எல்லாம் இருக்கின்றன. ஏன் காதலில்லாமல் திருமணம் சாத்தியமில்லையா? திருமணத்தின் நோக்கம் காதலுமல்ல, இன்பமும் அல்ல குழந்தை வளர்ப்பது, குடும்பம் நடத்துவது போன்ற கடமைகள்தான் என்று தனக்குள் நினைத்துப் பார்க்கும் யூலியா தனது நகரில் உள்ள திருமணமாகாத பெண்கள் பற்றியும் சிந்தித்துப்பார்க்கின்றாள். அவர்கள் தமக்கு வந்த திருமணத்தை ஒருகாலத்தில் மறுத்தவர்கள். பின்னர் மனங்கசத்துத் தம்மை நொந்து கொண்டவர்கள் இவ்வாறு தனக்கும் நடந்துவிடுமோ? ஒருவேளை கன்னியாஸ்திரி மடத்துக்குச் செல்ல நேருமோ? அல்லது நர்ஸாக ஆகித்தீரவேண்டுமோ? என அஞ்சுகின்றாள். சீட்டுக்கட்டுகளை அடுக்கித்தான் விரும்பும் சிவப்பு நிறம் வந்தால் 'சம்மதம்' என்றும் வராவிட்டால் 'சம்மதமில்லை' என்றும் முடிவெடுப்பதாக நினைத்து அதனைச் செய்து பார்த்துத் தீர்மானம் எடுக்கின்றாள். பயத்திலும் அனுதாபத்திலும் பிரச்சினையில் இருந்து தப்பிக்கவேண்டும் என்ற நினைப்பிலும் அவளது மனம் ஒரு முடிவை எடுத்துவிடுகிறது. லாப்தேவைச் சந்திப்பதற்குச் செல்கிறாள். அவள்போகும்போது 'காற்றை எதிர்த்துப் போராடியபடி, தொப்பியை இருகைகளாலும் பற்றிக் கொண்டு புழுதி கண்ணை மறைக்க நடந்தாள்' என்று சேகவ் எழுதுகின்றார். அவளது மன உணர்வை வார்த்தைகளில் வடித்த விதத்தை இரசிக்காமல் இருக்கமுடியாது.

இந்தவகையான உளவியல் பின்னணி கொண்ட இருவரும் தமக்கு ஒரு பிரச்சினைவருகின்ற போது நடந்து கொண்ட முறையைப்பார்க்கின்றபோது அதாவது காதலை மறுத்த வேளையில் வீட்டுக்கு வரும் லாப்தேவ் ஐந்துநிமிடத்தில் உறங்குகின்றான். காதலை மறுத்த யூலியா உறக்கமற்று உழன்றுகொண்டிருந்தாள். அது அவர்களின் ஆளுமையை வெளிக்காட்டுவது போல தோன்றுகின்றது. ஒருவர் நெருக்கீட்டிற்கு உட்பட்டிருக்கும்போது நித்திரைக் குழப்பத்தை உணர்வார் அல்லது நித்திரையை அதிகம் கொள்கின்றவராக இருப்பார். லாப்தேவிற்கு வாழ்க்கையே பிரச்சினைக்குரியது. அதனைத் தீர்ப்பதற்கான வழிவகையும் இல்லை. அவனுக்கு வழிபாடுகளிலும் நம்பிக்கையில்லை அவன் நித்திரையின் அடிமையாகிவிட்டான். யூலியாவிற்கு வாழ்க்கையில் பிரச்சினை வந்தது அவள் இயல்பாகவே வழிபாட்டைத் தனது துன்பங்களை நீக்கும் முறையாக, கருவியாகப் பயன்படுத்தியவள் பிரச்சினை வந்தபோது அதற்கான முடிவை எடுக்கவேண்டும். நெருக்கீடு தீரும்வரை அவள் நித்திரை கொள்ளவில்லைப் போலும் எனச் சிந்திக்க வைக்கின்றார் சேகவ்.

தனது முடிவை லாப்தேவிடம் அவள் தெரிவிக்கின்றாள். அவள் முடிவைக்கேட்ட லாப்தேவ் தன்னை விரும்பாத ஒருத்தி இப்பொழுது தன்னை விரும்புவதாகக் கூறுவது தனது பணத்திற்காகவே என்ற முடிவுக்கு வருகின்றான். இந்த முரண்பட்ட நிலையோடு அவர்கள் திருமணம் நடக்கின்றது. அவர்கள் மாஸ்கோவிற்கு வாழ்வதற்குச் செல்கின்றனர். அங்கு இருக்கும் இரண்டு நாள்களில் யூலியா தனது திருமணம் பெருந்தவறு, ஒரே துன்பம் என்ற முடிவுக்கு வருகின்றாள். 'மாஸ்கோவில் வாழாது வேறு எங்காவது இருந்தால் இதனைத்தான் சகித்திருக்கவே முடியாது' என்கிறாள். மாஸ்கோ அவளிற்குப் பிடித்துவிடுகிறது. அதற்கமைவாகத் தனது வாழ்க்கையைத் திட்டமிடுகிறாள். வீட்டுவேலைகளைக் கவனிப்பது, ஊர் சுற்றுவது, லாப்தேவ் நண்பர்களுடன் விவாதிப்பது என வாழ்கிறாள். லாப்தேவ் தனக்குரிய காதல், இன்பம் கிடைக்கவில்லை என்று ஏக்கத்தோடே தனது காலத்தைக் கடத்துகின்றான். இடையில் முன்னாள் காதலியைச் சந்திக்கின்றான். அவள் இவனது திருமணத்தைப் பற்றி விவாதிக்கின்றாள். தன்னை வெறுத்தமை பற்றிக் குற்றஞ்சாட்டுகின்றாள். அந்த விவாதம் லாப்தேவின் ஆழ்மனத்தில் கிடந்த எதிரான எண்ணங்களைத் தூண்டிவிடுகின்றது. அவன் மேலும் மேலும் துன்புறுகின்றான்.

இந்த உள்ளக முரண்பாடு ஒரு நாள் நண்பர்கள் எல்லோரும் கூடி, 'கலை'பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது காதலைவிட எழுதுவதற்கு வேறுவிடயங்கள் நிறைய இருக்கின்றன என்ற கருத்தை யூலியா ஏற்றுக் கதைத்தமை லாப்தேவிற்குப் பிடிக்கவில்லை. இருபத்திரண்டு வயதான தனது மனைவி காதலை வெறுப்பதை அவனால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. இது அவனாக நினைத்த கற்பனை தனது அந்த நினைப்புச் சரியென அவன் நினைத்தான். யூலியாவை (தனது பணத்திற்காகத் தன்னைத் திருமணம் செய்தவள் என்ற கருத்தில்) தாக்கும் நோக்கில் தனது கருத்துகளை முன்வைத்தான். அது அவளைக் காயப்படுத்துகின்றது. நண்பர்களுடன் அவள் வெளியேறுகின்றாள். லாப்தேவ் தனது கற்பனையில் அவள் தனது நண்பர்களுடன் சோரம் போனால் நல்லது என எண்ணினான். உண்மையில் அப்படி நடந்தால் அதைக்கண்டு பிடித்து விட்டுத் தான் நஞ்சருந்தி இறக்கலாம் என நினைத்தபடி வெளியேறினான். அவன் திரும்பி வரும்போது அவள் படுத்திருந்தாள். தான் லாப்தேவின் கதையால் வருந்துவதாகக் கூறினாள்.

(அடுத்தவாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைலஜா

காலம் வீணடித்த
வரலாறை நினைக்கும்
பொழுதுகளில்....
ஆண்டுக்கு ஒருமுறை
அரசியல் ஆரவாரங்களுக்காக
உன் நினைவுகளைச் சுமந்து வாழும்
பல நூறு மனிதர்களுக்குள்
நானும் ஒருத்தியாக.....

வாழ்வின் கொடுமையை நீயாகவே
வருவித்துக் கொணர்ந்தாயோ?
துணிவும் தன்னம்பிக்கையும்
மதிப்பில்லா இடத்தில்
மாண்டு போனதே
ஓர் இளைய வரலாறு
சித்திரவதை செய்யப்பட்டு
அரசியல் இலாபங்களுக்காக
பலியிடப்பட்டதோ?
உண்மையான மனிதனின்
உயரிய குணங்கள்
சுயநலமிக்க சமூகமொன்றால்
சூறையாடப்பட்டதோ?

தொலைந்ததைத் தேடும் தாய்மார்..
காணாமற்போன கருக்களுக்காக
கதறும் கர்ப்பப்பைகள்
கண்முன்னே கருக்கலைப்பு நடந்ததாக..
உருவத்தை உருக்கி...
தாயின் உயிரைக் குடித்து...
உள்ளம் அலற வைத்த
ஒருவனின் மரணத்தை
கூட்டமாகக் கூடி இருந்து
அதை ஏற்றுகொண்டு
அகிம்சை என்று
அமைதியாக இருந்து
அவனை இறந்துபோக விட
எம்மால் எப்படி முடிந்தது?

கூரிய ஆயுதங்களால் வெட்டிக்கொலை
செய்வதற்கு மேலான கொடுமையை
எல்லோரும் சேர்ந்து இழைத்தோம்!
பார்த்தீபா!
நீ கேட்டவை கிடைக்காமல்
கேட்காதவை எல்லாம் கிடைத்து
துன்பங்களை மட்டும் தூக்கிக்கொண்டு
அலைகின்ற உன் தோழர்களின்
வாழ்வை எண்ணி உன் ஆத்மா
என்ன செய்யும்?

இறக்கப் போவதை இருந்து கொண்டு
பார்த்தவர்க்கெல்லாம்
இதயம் இறுகிய காலங்கள் ...
மூன்று தசாப்தங்கள் கடந்தும்
அழியாத வலிகள்
நெஞ்சின் ஈரங்களை உறிஞ்சி முடித்தன..
வருடங்களில் மட்டுமல்ல
வாழ்க்கை முழுவதும்
உன் நினைவை
சுமந்துகொண்டு அலைகின்றேன்!

காலம் தந்த கடவுளை
கண்முன்னால்
இழந்த வரலாறு
ஈழத்தின் காந்தியைத்
தொலைத்த துரதிர்ஷ்டம்..
பசித்தவர்களுக்காக பசிகிடந்தாய்
போராட்டம் இன்றி
சாதிக்க நினைத்தாய்
சாவு ..நொடிக்கென வருத்த
சுற்றியிருந்தவர்கள் பார்த்திருக்க

உன் சுவாசம்
மெல்ல மெல்லப் போய் முடிந்தது..
தற்கொலைக்குத் தூண்டுவதும் குற்றம்
தற்கொலையும் குற்றமென்றால்
ஓர் இளைஞன் தன் உயிரை
மாய்த்துக்கொள்ள...
அதைக் கண்முன் படமாகப் பார்த்துக்கொண்டு
அமைதியாக வேடிக்கை பார்த்த

நாங்கள் அனைவரும்
குற்றவாளிகள் தானே?
அந்தக் குற்றத்திற்குத்தானோ
நாங்கள்
அனைவரும் தண்டிக்கப்பட்டோம்?
எத்தனை ஆயிரம்
பள்ளி மாணவர்களின்
இதயக் கண்களில்
உன் விம்பம் படிந்திருக்கும்..
ஒருவன் செத்துக்கொண்டிருப்பதை
அழுதுகொண்டு பார்த்துவிட்டு
அரசியலாக்கி அதை போராட்டமாக்கி
அமைதி அடைந்த நாம் அனைவரும்
மனிதர்களா?

கருவின் காலம் வயிற்றில் தொடங்கி
மெல்ல மெல்ல அது வளரும் வரை
பார்த்து
உருத்தெரியா அப்பிறவியின்
உருவம் காண அங்கலாய்க்கும்
ஒரு தாயிடம்
கேளுங்கள்
அந்தக் கருவின் வாழ்வு கண்முன்னே
தொலைந்து போவதை
பார்க்கமுடியுமா என்று?

பார்த்தீபனே
நீ கேட்ட எதுவும்
இன்று கிடைக்கவில்லை
சகோதரர்கள் பலர்
தம் வாழ்வை இழந்து
பரதேசிகளாக வாழ்கிறார்கள்...
பலர் இருக்கிறார்களா என்பது
தெரியாது.....
பலரை திறந்தவெளியில்
கைதிகளாக்கி
பலரை உயிர் இருக்கும்
முண்டங்களாக்கி
பலரை ஊமைகளாக்கிய போர்
முடிந்து போனது
உனக்குத் தெரியுமா?

பெரு நெருப்பு
புகைந்து
கொழுந்துவிட்டு எரிந்து
அடங்கிப்போன காலப்பொழுதை
எண்ணி உன் ஆத்மா
என்ன நினைத்திருக்கும்?

உன் சாவின்போது
கவிதை படித்தவர்கள் எல்லாம்
இன்று மா மனிதர்களாக
பெரிய பதவிகளில் ...
சொகுசு வாழ்வில்
பலவற்றை மறந்து போனார்கள்
உன் உயிரின் மதிப்பைக்
காலம் கணக்கிட மறந்தது
அரசியல் இலாபத்திற்கும் ...
நிலைத்திருப்புக்குமாக

உன் பெயரை உச்சரிப்பவர்கள்
உன் தியாகத்திற்கான காரணத்தில்
ஒன்றையேனும்
தருவித்துத் தந்தார்களா?

உன் மரணத்தின்போது நானும்
கவிதை படித்தவள்தான்
அப்போது சிறுமியாக
பள்ளிச்சீருடையோடு வந்தேன்
போராட்டம் பற்றிய போதிய
புரிந்துணர்வில்லாமல்....
எமக்காக நீ உயிரைக்கொடுக்கிறாய்
என்பது மட்டும் விளங்கியது...
அனைவரது கண்களில் இருந்தும்
நீர் வடிந்தபடி இருக்கும்..
உன் மனநிலையை
யாரும் உணர்ந்துகொள்ளமுடியாது..
சில நேர உணவை விடுக்கும்

விரதங்களில்கூட தாங்கமுடியாத
வலியை பல நாள்கள் தாங்கினாய்!
அத்தனை வலியும் கூட்டாக
உன் வயிற்றில் படர்ந்திருக்கும்...

சிறையிலிருந்து வாடியவர்களுக்காக
உலகத்திடம் நீதி கேட்டாய்....
சிறையில் இருப்பவர்களுக்காக
மக்கள் இன்றும்
அழுதுகொண்டுதான் இருக்கிறார்கள்..
இங்கே நடக்கும்
அரசியல் சூதாட்டங்களும்
ஆணவச் செருக்குகளும்....
மிகப்பெரிய மாற்றங்களை
எளிதாக ஏற்படுத்திவிட்டன...

உன் மரணத்தின்போது
கூட இருந்த எனக்கு...
இக்காலத்தின் மாற்றம்
தாங்கமுடியாத வலியைத் தருகிறது..
நீ தோற்றுப் போனாயா பார்த்தீபா?
நேர்மையான உன் போரட்டம்
அரசியல் ஆட்டங்களால்
அடிபட்டுப் போனதா?
எதிர்காலம் உன்னை மறந்துவிடுமா?

என் மரணம் வரை உன் நினைவுகள்
இருந்தாலும் ....
உன் மரணத்தின் வலி
இந்தச் சமூகத்துக்கு
ஒரு சாபம் ..
ஒரு பல்கலை மாணவனை
இறக்கப் பார்த்திருந்த சமூகம்

இன்று எதற்கெல்லாமோ
போராடுகிறது...
உன் தீர்மானத்தை மாற்றி
உன்னையும் இவ்வுலகு
வாழ வைத்திருக்க வேண்டும்!

தமது பிள்ளைகளின் எதிர்காலம்
மருத்துவர்களாக கனவு காண்கிற
எத்தனை பெற்றோருக்கு
இந்தப் பார்த்தீபனை நினைவு இருக்கிறது!
எத்தனை கடின உழைப்பில்
அவன் வாழ்வு வடிக்கப்பட்டிருந்தது
அவன் இறப்பு அர்த்தமற்றதாகியதா?

எத்தனை உள்ளங்கள் அழுதன
உண்மையாக அழுத நெஞ்சங்களின்
வேண்டுதல்கள் எதுவுமே
நிறைவேறவில்லையே!

ஆண்டவனை நம்பித்தானே
கோயில் தெருவில் விரதம் ஆரம்பித்தாய்
இறைவன் வருவான் என்று தான்
உன் உள்மனம் எண்ணியிருக்கும்!
ஓர் இளைஞனின் உயிர்
நியாயத்துக்கான காரணத்தோடு
மெல்ல மெல்லப் பிரியும்போது
இறைவன் வரவே இல்லையே!
அருள் இல்லாத இறைவனுக்கு
வருடாந்தம் கோலாகலம்
உன்னை நினைத்தால்
வாழ்வின் பல உண்மைகள் தெளியும்!

பார்த்தீபா!
இறைவன் உண்மையென்றால்
உன்னை அவன்
வாழவைத்திருக்கவேண்டும்!
இந்த மண்ணில் ஒரு மருத்துவனாக நீ
வாழ்ந்திருக்கவேண்டும்
கருணையுள்ள இறைவனிடம்
கத்திக் கத்தி தேற்றுப்போனவளாக
உரத்துச்சொல்கிறேன்
இந்த இறைவனிடம்
சக்தி இல்லை!
உன்னைக்கொன்ற




அந்தக் கோயில் வீதியின் பக்கம்
என் கால்கள் போக மறுக்கின்றன..

நல்லூர் வரலாற்றின் இடமென்றால்
எம் வாழ்வுக்காக உயிர் விட்ட
ஒரு மைந்தனைக் காப்பாற்றாமல்
கொன்றுபோட்ட வரலாறும்
இங்குதான் பொதிந்திருக்கிறது.....
எல்லாவற்றையும் எம் கண்கள்
ஆழப்பதிந்து படம்
பிடித்திருக்கின்றன..

முன்னால் நடந்த அனைத்தையும்
இத்தனை சாதாரணமாக
மறந்துபோக
எங்களால் எப்படி முடிந்தது?

இறந்த பின்னும் தன் உடலை
கல்விக்காக தந்தவன் நீ
என் கல்விக்காகவும்,
கடமைக்காகவும்
உன் உடலைப் பார்க்கும் போதெல்லாம்
இந்த உலகத்தை வெறுக்கிறேன்
வாழ்வின் மீதான
பிடிப்பை இழக்கிறேன்!

சிறுபிள்ளையாக நான் இருந்த போது
உன்னை என் கண்களில் விழுத்திய
நிழல் பிரதி ....
இத்தனை காலங்கள் கடந்தும்
மறக்கமுடியவில்லை!

வரலாற்று இலக்கியங்களில்
இற்றைவரை காணாத தியாகத்தை
நீ செய்தாய் என்பதை
எம் அடுத்த பரம்பரைகளும்
தெரிந்துகொள்ளவேண்டும்!

ஒருவனின் சாவைப் பார்த்திருந்து
அவன் இறப்பினைப் பதிவுசெய்த
அத்தனை உள்ளங்களும்
நினைத்துப் பார்க்கட்டும்
உங்கள் மகனை
உங்கள் கண்முன்னால்
இழந்திருப்பீர்களா?
கொடிய வலியைப்பார்த்து
தாய் தாங்கிகொள்ளமாட்டாள்
என்பதால் தானோ
தாய் இல்லாத மகனாக
காலம் அவனைக்
கணக்கு வைத்துக்கொண்டது?

எந்தத் தாயும்
பொறுத்துக்கொள்ளமுடியாத துயரை
ஓர் அறிவு ஜீவியை
அமைதியான மனிதனை
கோயில் வீதியில்
கோடி மக்கள் சாட்சியாக வைத்து
கொன்றுவிட்டீர்கள்!

இழந்தவனுக்கு மட்டுமே
இழப்பில் வலி தெரிகிறது..
பார்வையாளர்களுக்கு அது
ஒரு செய்தியாகவும்
சம்பவமாகவும்
இருந்துவிட்டுப் போய்விடும்!

கடல்களைத் தாண்டி
இன்று மருத்துவராக
நான் வாழும்போது
உன்னை நினைத்து
என் நெஞ்சு
நித்தமும் மாளும்....
உனது மரண வலி முடிந்து
எனது மரணவலி
தொடர்கிறது..
சமூகத்திற்காக
இறந்தவர்களின் பின்னால்
சத்தமில்லாமல்
செத்துக்கொண்டிருக்கும்
சாகாப்பிணங்களைப்பற்றி
யாருக்குத்தெரியும்?

நீ செத்தால் என்ன
நான் செத்தால் என்ன?
அவர்கள் அப்படியே...
அவ்வாறே
வாழ்ந்து
கொண்டிருப்பார்கள்!
இங்கு யாரும்
யாருக்காகவும்
அழுதுகொண்டு
வாழ்வதில்லை
இலகுவாக எல்லாம்
மறக்கப்படுகிறது

நீ செய்த தியாகம்
கணக்கிடமுடியாதென்பதை
காலமும்
புரிந்துகொள்ளவில்லை..
வருடந்தோறும் ..
உன்னை வைத்து
ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்
போராட்டம் செய்கிறார்கள்...
அரசியல் வாழ்வு
இப்படித்தான்....
இறையருள்
இல்லாத வாழ்வில்
காலத்தின் கணக்கில்
அகப்பட்டு
நேசித்த உயிரைத்
தொலைத்துவிட்டு
காலம் முழுக்க அழும்
என்னைக் கேளுங்கள்


பார்த்தீபனின் இழப்பு
யாருக்கு
வலிநிறைந்ததென்று?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







இ.திரிசன்
தரம் - 2B
யா/சாவகச்சேரி இந்து
ஆரம்பப் பாடசாலை




ப.பவனுசன்
தரம் - 5A
யா/இந்து ஆரம்பப்
பாடசாலை



ஜெ.பாமிலன்
தரம் 11 E
யா/ சென்.ஜோன்ஸ்
கல்லூரி.



பி.ஜீவிதா
தரம் 3
யா/ மானிப்பாய் சோதி வேம்படி
வித்தியாசாலை



K.கபில்ராஜ்
தரம் - 9
யா/கரந்தன்
இராமுபிள்ளை
வித்தியாலயம்.




A. சதுஷ்டிகா
தரம் 8
ஏஞ்சல் இன்டர்நஷனல்
பாடசாலை,
மானிப்பாய்


மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.


அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## வழிகாட்டுவோம்




## குருவியும் எறும்பும்



ஒரு பசுமையான தோட்டத்தில் பெரிய மாமரம் ஒன்று இருந்தது.
அதன் கிளைகளில் சிறிய குருவியொன்று வாழ்ந்துவந்தது.
ஒருநாள், அந்தக் குருவி பசி காரணமாக பழம் தேடிச்சென்றது. அது மாம்பழத்தைத் தின்று கொண்டு இருந்தபோது, கீழே ஒரு எறும்பு வந்து சொன்னது.
"குருவி நண்பா! எனக்கும் கொஞ்சம் பழம் வேண்டும்."
குருவி சிரித்தது.
"நீ சிறிய எறும்பு, பழத்தை எப்படி உண்ணப்போகின்றாய்?" - என்றது.
ஆனால் எறும்பு தன்னம்பிக்கையுடன் சொன்னது.
"நான் சிறியவனாக இருந்தாலும் உழைப்பால் எல்லாம் சாதிக்கமுடியும்."
அதைப் பார்த்த குருவி, பழத்திலிருந்து சிறிது துண்டை கீழே போட்டது.
எறும்பு அதை மெதுவாகத் தூக்கி எடுத்துச்சென்று தன் கூட்டத்தில் பகிர்ந்தது.
அடுத்த நாள் பெரிய மழை பெய்தது.
குருவியின் கூடு வீழ்ந்துவிட்டது. அப்போது அந்த எறும்புகள் ஒன்றுகூடி, குருவிக்கு புதிய கூடு கட்ட உதவின.
அப்போது குருவி , "நான் உனக்குக் கொஞ்சம் பழம் கொடுத்ததற்காக, நீ எனக்கு பெரிய உதவி செய்தாய்." என்றது. அப்போது எறும்பு சிரித்துக்கொண்டே "நண்பனுக்காக செய்யும் உதவி எப்போதும் சிறியது அல்ல" என்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org